Registered as a News Paper  பக்கங்கள் 10  விலை: ரூபா 6-00

பொது நூலகம்
மாநகராட்சி மன்று
-9-4-1993
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 27 [09-04-1993] வெள்ளிக்கிழமை ஓசை 50

## யாழ் - வன்னி தொடர்பு சேவை நாளை ஆரம்பம்

நெருக்கடி கால யாழ்-வன்னி தொடர்பு சேவை நாளைசெயற்படத் தொடங்குகிறது. யாழ்-வன்னிப் பகுதிகளிற்கிடையில் செய்திகளைப் பரிமாற்றிக் கொள்வதற்கான இச்சேவை நாளை சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் ஓர் அங்கமாகச் செயற்படத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் விடுத்துள்ள நடைமுறை விபரம் வருமாறு: தகவல்களை எழுதி அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கான படிவம் எல்லா (10 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை தாக்குதலுக்கு இருவர் பலி; 6 பேர் காயம்

## கிளாலிக் கடலில் சம்பவம்

கிளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் நேற்று முன்தினமிரவு நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் இரண்டு அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு ஆறு பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதல் இரவு 10.00 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி காந்திக் கிராமத்தைச்சேர்ந்த தங்கராஜன், ஊற்றுப் புலத்தைச் சேர்ந்த குமார் ஆகியோரே இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

சுப்பையா தியாகராசா(155 ஆம் கட்டை பாரதிபுரம் கிளிநொச்சி), கறுப்பையா ஜெகநாதன் 155ஆம் கட்டை கிருஷ்ணபுரம் கிளிநொச்சி), ஆறுமுகம் பிரகாஸ் (இல 72, பாரதிபுரம் மேற்கு), நாராயணசாமி கணேசன் (155 ஆம் கட்டை பாரதிபுரம் கிளிநொச்சி), சீனி இரபுராசா (155 ஆம் கட்டை மலையாளபுரம், கிளிநொச்சி). முத்தையா நாகராஜா (32 ஆம் வாய்க்கால் பிரமந்தனாறு விசுவமடு! ஆகியோரே காயம் அடைந்தவர்களாவர்.

இதேவேளை கிளாலிக்கடற்பரப்பில் நேற்றுமுன்தினமிரவு பலத்த எறிகணை வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றதாக அன்றிரவு அக் கடற்பரப்பு ஊடாகப்பயணம் செய்த பயணிகள் தெரிவித்தனர்.

## பொன்னாலையில் அகோர ஷெல் தாக்கு

காரைநகர் கரையோரக் காவல் நிலைகளிலிருந்து நேற்றுக் காலை 9.20 மணியளவில் பொன்னாலைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது எறிகணை, கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் 50 நிமிடங்கள் வரை நீடிக்கப்பட்ட தொடர்ச்சியாக எறிகணைகள் ஏவப்பட்டன. இவ் எறிகணைகள் மூளாய், பொன்னாலை பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்கள், பனந்தோப்புகள், வயல் வெளிகள் ஐயனார்கோவிலடி, பொன்னாலைக் கிருஷ்ணன்கோவிலடியை அண்மித்த பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

இவ் அகோர ஷெல் தாக்குதலினால் அச்சமுற்ற மக்கள் பாதுகாப்புக் கருதி தமது வதிவிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். இச்சம்பவத்தின் போது பொன்னாலையில் சில வீடுகளும், கடல் வளம் உற்பத்தி ஸ்தாபனத்தின் கட்டடமும் சேதமாக்கப்பட்டுள்ளன.

மேலும் இச் ஷெல் தாக்குதலின் போது தொல்புரம் மத்தியில் வதியும் பொன்னம் [10 ஆம் பக்கம் பார்க்க]

## கழுத்துறை சிறையிலிருந்து தமிழர்சிலர் விடுவிக்கப்படுவர்

((வடமராட்சி)

கழுத்துறை, பலாலி சிறிலங்கா இராணுவ தடுப்பு முகாம்களில் நீண்ட பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பலர் விரைவில் விடுதலை செய்யப்பட உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புத்தாண்டு தினத்தையொட்டி இரண்டு தடுப்பு முகாம்களிலிருந்தும் இளைஞர்களை விடுதலை செய்ய இராணுவ உயர் மட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அறிய முடிகிறது.

கழுத்துறை, பலாலி தடுப்பு முகாம்களில் உள்ள தமிழ் இளைஞர்கள் தாங்கள் விடுதலை செய்யப்பட இருப்பதாக தங்கள் உறவினர்களுக்கு தபால்கள் மூலம் தகவல் தெரிவித்துள்ளனர். (யோ)

## செட்டிகுளம் பகுதியில் தமிழருக்கு அகதிமுகாம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமென தனித்தனியான அகதி முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட செட்டிகுளப் பிரதேசத்தின் சில பகுதிகளில் இம்மக்களின் காணிகளில் சிங்களக் குடியேற்றங்கள் அண்மைக் காலமாக தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது..

வவுனியாவின் மற்றுமொரு எல்லைப் பகுதியான பாவற்குளத்திலும் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க முயற்சிகள் முடிவடைந்துள்ளன.

## வீரச்சாவு

### வீரவேங்கை விஸ்வம்

19-03-93 அன்று இரவு அம்பாறை மாவட்டத்தில் இயக்கவேலை காரணமாகச் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகள் போராளிகள் மீது விசேட அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை விஸ்வம் (நாகமணி சந்திரசேகரம், முனைக்காடு கொக்கட்டிச்சோலை) வீரச்சாவு அடைந்தார்.

### 2 ஆம் லெப். பாப்பா 2ஆம் லெப். நவக்குமார் வீரவேங்கை தேவதாஸ் [தேவகுமார்]

26-03-93 அன்று பிற்பகல் 2-30 மணியளவில் மட்டக்களப்பு அலியா ஓடைக்காட்டுப் பகுதியில் மறைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினர் இயக்கவேலை காரணமாகச் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகள் போராளிகள்மீது தாக்கியதில் 3பேர் வீரச்சாவடைந்தனர்.

2ஆம் லெப்டினன்ட் பாப்பா (தர்மலிங்கம் பிரசாத் மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை), 2ஆம் லெப்டினன்ட் நவக்குமார் (தியாகரராஜா நேமிநாதன், பெரியநீலாவணை, மட்டக்களப்பு) வீரவேங்கை தேவதாஸ்/தேவகுமார் (வெற்றிவேல் சிறிதரன், காரைதீவு 3 அம்பாறை) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவார்.

### வீரவேங்கை கலாறூபன் லோஜித்

26 - 03 - 93 அன்று பிற்பகல் 3-00 மணியளவில் மட்டக்களப்பு தம்பிலுவில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார்.

வீரவேங்கை கலாறூபன் லோஜித்(இளையதம்பி அற்புதராஜா, தம்பிலுவில் மட்டக்களப்பு) எனும் போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

### வீரவேங்கை றொபி [கதிராஜன்]

03-04-93 அன்று காலை 8-30 மணியளவில் மட்டக்களப்பு கிரான் சின்னவேம்பு எனும் இடத்தில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியதில் இயக்கவேலை காரணமாக சென்று திரும்பிக்கொண்டிருந்த போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி 1992ஆம் ஆண்டு வர்த்தக தொழிற் கற்கைக்கான தேசிய தராதரப்பத்திரப் பரீட்சை (N‿BS) ஏப்பிரல் 26 ஆம் திகதியும், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 2-ம் வருடம் இறுதிப்பரீட்சை மே 3ஆம் திகதியும் தொடங்க இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

## இராணுவ விமானம் விபத்திலிருந்து தப்பியது

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து 52 இராணுவத்தினருடன் பலாலி விமான நிலையம் சென்ற சிறிலங்கா விமானப்படை விமானம் ஒன்று விபத்து ஒன்றிலிருந்து கடைசிநேரத்தில் தப்பித்துக் கொண்டது.

விமானப்படையினருக்குச் சொந்தமான இந்த அவ்ரோ விமானம் பலாலியில் தரையிறங்க முயற்சித்த சமயம் விமானத்தின் முன்சக்கரங்கள் கழன்றுவிட்டிருந்தமை இறுதி நேரத்தில் கண்டறியப்பட்டது. இதனால் விமானம் பலாலியில் தரையிறக்கப்படாது திரும்பியது.

மீண்டும் இரத்மலானைக்குச் சென்ற விமானம் ஆபத்துக்கால தரையிறக்கலுக்காக விமானத்திலிருந்த எரிபொருளின் அளவை குறைக்கும் பொருட்டு சுமார் இரண்டரை மணிநேரம் ஆகாயத்தில்வட்டமிட்டபடியே இருந்தது. பின்னர் விமானம் ஒருவாறாக விபத்தேதுமின்றி இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

## மாகாணசபை தேர்தல் அடுத்தமாதம் 17 ஆம் திகதி

(கொழும்பு)

ஏழு மாகாணசபைகளுக்குமான தேர்தல் அடுத்த மாதம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். தேர்தல் நடைபெறும் திகதியை நேற்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா அறிவித்தார்.

தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் நேற்று நண்பகல் 12. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இத்தேர்தலில் 9 அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகளும், 5 சுயேட்சைகுழுக்களும் போட்டியிடுகின்றன. இரண்டாயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றர். 93லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். தேர்தல் வாக்களிப்பு 8, 198 நிலையங்களில் இடம் பெறும்.

7மாகாணசபைகளுக்கும்இத் தேர்தல் மூலம் 366 மாகாணசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

## யாழ். திருமலைகப்பல்சேவை 14ஆம் திகதி ஆரம்பம்?

(கொழும்பு)

திருக்கோணமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 14ஆம்திகதி ஆரம்பமாகவுள்ளதாக கொழும்பில்இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருக்கோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் 'நகர' என்ற பயணிகள் கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி வந்தடையும் என்றும் மீண்டும் 17ஆம் திகதி திருக்கோணமலைக்கு செல்லும் போது விசேட சிகிச்சைக்காக ஒரு தொகுதி நோயாளிகளையும் பயணிகளையும் ஏற்றிச் செல்லும் என்றும் தெரிய வருகிறது.

இக்கப்பலில் கொழும்பு செல்லும் பயணிகளது பெயர்ப்பட்டியலை யாழ். அரசாங்க அதிபரே தயாரிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 102 வெற்றிடங்களுக்கு 11 தாதிகளே நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 11 தாதிகள் மார்ச் 15 ஆம் திகதி புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான நியமனக் கடிதத்தில மார்ச் 15 எனக் குறிப்பிடப்பட்ட போதிலும் ஏப்பிரல்முதல் வாரத்திலேயே இக் கடிதங்கள் கிடைத்ததாக தெரியவருகின்றது. இதனால் இவர்கள் தமது கடமையை கடந்த 6ஆம் திகதி தொடக்கம் பொறுப்பேற்றுள்ளார்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ். போதனாவைத்தியசாலைக்கு 102 தாதிகள் வெற்றிடம் உடனடியாக நிரப்ப வேண்டியிருந்த போதிலும் 11 தாதிகளே நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் 280 தாதிகள் பணிபுரிந்து வருகிறார்கள் புதிதாக நியமனம் பெற்ற இந்த 11 பேருடன் சேர்த்து 291ஆக உயர்ந்துள்ள போதிலும் குறைந்தது மொத்தம் 382 தாதிகளாவது இங்கு பணிபுரிந்தாலே ஓரளவுக்குத் தாதிகள் சேவையை சீராக்க முடியுமென வைத்தியசாலை வட்டாரங்களில்இருந்துதெரிய வருகின்றது. (சி)

# வரி விளம்பரம்

## பாலராசிரியராக

பாலராசிரியராக தபால்வழியிலும் சனி, ஞாயிறு நேரிலும், பயிற்சி பெறலாம். சனிக்கிழமைகளிலும் சந்திக்கலாம். க.பொ.த. [சா/த] கடைசித் தகைமை. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி-4083)

## மழலை மேதைகள் போட்டி

பாலர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கற்பிக்கும் பாலர்கள் மட்டும் பங்கு பற்றலாம். பரிசுகள் வழங்கப்படும். சனி, ஞாயிற்றுக்கிழமையில் தொடர்பு கொள்ளவும். பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (4084)

## சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி/6356)

## ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டிக்குளி. (சி/ 6358)

## வகுப்புக்கள்

SHORTHAND & TYPING- தமிழ், ஆங்கில மொழிகளில் வாரநாள்/வார இறுதி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். SCHOOL OF BUSINESS ADMINISTRATION, 16, 3rd Cross Street, Jaffna. (சி/6349)

## சுருக்கெழுத்து

வடமராட்சிசுருக்கெழுத்துக் கழக அங்கத்தவர்கள், பழைய மாணவர்களுக்கான விசேட கூட்டம் இன்று 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். - செயலாளர். (4644)

## தேவை

வெற்று கோழித்தீன்பைகள் விலைக்கு வாங்கப்படுகிறது. மில்க்வைற். (சி 6364)

ஜாம் போத்தல்கள் பன்ார, கொக்கோகோலா வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும், சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி/6322)

## விற்பனைக்குண்டு

பிறவுண் பேட்டுக் குஞ்சு உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு:- மல்லிகாபதி, மானிப்பாய். (4645)

## உங்களை அழைக்கின்றது

யோ.எக்கட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுககுளி மகளிர், கல்லூரிமுன் ஒழுங்கை. மதிய உணவுப் பாசல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, (சி,6357)

## ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல்மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

## சரசாலை கலைமகள் கல்வி நிலையம்

கலைமகள் கல்வி நிலையம் சாவகச்சேரி G.C E (O/L) DAY CLASS ஆரம்பம் 10-04-1993 சனி பி.ப.4 30 ஆண்டு 5 முதல் 11வரையான வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (4652)

## நினைவு கூருகின்றோம்... 1993-04-09

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

இதேதினத்திலிருந்து நான்கு நாட்களில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கையின் போது காணாமற்போன 21 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி-புளியம்பொக்கணைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

கப்டன் பிரசன்னா (அமரசேகரம் குமரசேகரம் - திருநகர் - கிளிநொச்சி)

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

கப்டன் அருண் / சந்துரு (ஏரம்பு பாலச்சந்திரன் - புங்குடுதீவு)

விசுவமடு - பிரமந்தணாற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

2-ம் லெப். அன்பு (யோகராசா நடேஸ்வரன் - உதயநகர் - கிளிநொச்சி)

1991 ஆம் ஆண்டு யாழ்-கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

வேணுகோபால் (—கணபதிதாசன் - திருமலை)

மட்டு-தொப்பிக்கல் மலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

நெடுமாறன் (செல்லத்துரை சந்திரன் -அக்கரைப்பற்று - அம்பாறை)

சுதாகரன் (றைசன் எசிங்கடன் டிமா - கல்முனை, பொத்துவில் - அம்பாறை)

திலகன் (கோபால் இராமநாதன் - அக்கரைப்பற்று அம்பாறை)

கப்டன் வசந்த் (சின்னத்தம்பி திருமால்-சித்தாண்டி மட்டு.)

லெப். இன்பராஜ் (சிதம்பரப்பிள்ளை விவேகானந்தராசா - கிரான் - மட்டு )

லெப். சக்தி (நல்லதம்பி நடராசா - சித்தாண்டி - மட்டு )

2-ம் லெப். சுகந்தன் (கதிர்காமன் வரதராஜா - சித்தாண்டி - மட்டு.)

2 ம்லெப். பாப்பா (சின்னத்துரை சந்திரன் - கொக்கட்டிச்சோலை - மட்டு.)

ஆதித்தன் / ரகு (நாகமணி சபேசன்-கொம்மாந்துறை - செங்கலடி - மட்டு )

பத்மன் (தர்மலிங்கம் புனிதநாதன் -முறக்கொட்டாஞ்சேனை, வந்தாறுமூலை - மட்டு )

புஸ்பராசா (மாணிக்கம்போடி தர்மலிங்கம்-ஆயித்தியமலை, மகிழவெட்டுவான் - மட்டு.)

கண்ணன் (வடிவேல் கண்ணன் - கிரான் - மட்டு.)

விசாகன் (சீனித்தம்பி தயாபரன் - கல்லடி - மட்டு.)

ருக்மன் (குழந்தைவேல் தயாபரன் - களுதாவளை - மட்டு)

கைலன் (சிவலிங்கம் நடராசா - இராஜபுரம், மரப்பாலம் - மட்டு).

மனோ (அழகையா சுந்தரத்தினம் - நாவற்காடு-மட்டு)

தாஸ்/தீசன் (வைரமுத்து சுந்தரலிங்கம் - தாழங்குடா - மட்டு)

மிதுரன் (— ரவீந்திரன் ஏறாவூர் - மட்டு)

விதுவன் (— மட்டு)

அருள் (வேல்முருகு மேகநாதன் - தாழங்குடா-மட்டு)

மைனா (பொன்னுத்துரை சுரேஸ்குமார் - இலுப்பையடிச்சேனை -மட்டு)

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட கொம்மாந்துறை 10ம் கட்டை வீதியைச் சேர்ந்த 2 தமிழ் இளைஞர்கள் மற்றும் ஈரலிக்குளம் வாசியான தமிழ் விவசாயி.

1992 ஆம் ஆண்டு யாழ். - வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நிகழ்ந்த நேரடிச்சமரின் போது விழுப்புண் அடைந்த நிலையில் யாழ்-மருத்துவமனையில் வீரச்சாவெய்திய -

லெப். புலித்தேவன் - பார்த்தீபன் (முருகேசபிள்ளை சிதம்பரேஸ் - வட்டுக்கோட்டை, சித்தன்கேணி யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-6370)

## COMPUTER CLASS IN BASIC LANGUAGE

ஆரம்பம்
வார நாள் வகுப்புகள் 15-04-1993 (4 மாதம்)
வார இறுதி நாள் வகுப்புகள் 17-04-1993 (6 மாதம்)

- இலகு விரிவுரைகள்
- விசேட செய்முறைப் பயிற்சியுடன் கூடியது

குறிப்பு:-
வார இறுதி நாள் வகுப்புகள் கூடிய செய்முறைப் பயிற்சியும் மேலதிக பயிற்சிகளையும் உள்ளடக்கிய விசேட பயிற்சி நெறி (Special Course)

மேலதிக விபரங்கட்கு:
**North Ceylon Technical Institute**
14, St. Peters Lane, Hospital Road,
Jaffna.

(சி-6374)

## London Accountancy Classes

*NOV - DEC* 1993

| | |
|---|---|
| C. I. M. A. | STAGE I |
| A. A. T. | PRELIM |
| | INTER |
| I. A. B. | FOUND |
| | Inter |
| | Finals (பின் அறிவிக்கப்படும்) |

ஆரம்பம் : **24th APRIL 1993**

மேலதிக விபரங்களுக்கு:
**North Ceylon Technical Institute**
(Result Oriented Institute in North)
14St PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.
(சி-6375)

## பிரத்தியேக புதிய சயன்ஸ் சென்ரர்

எழிலகம் முன் லேன்- யாழ்ப்பாணம்

★ 95 A/L ★

ஆரம்பம் :
**10 - 04 - 93 காலை 8.00மணி**

| | |
|---|---|
| தூய-பிரயோக கணிதம் | - திரு. குணசிங்கம் B.Sc(Hons) |
| இரசாயனவியல் | - திரு. செல்வா B.Sc(Hons) |
| பௌதிகவியல் | - திரு. ரவீந்திரநாதன் B. Sc. (Cey) Dip. in Ed. |
| விலங்கியல் | - திரு. ஈஸ்வரதாசன் B. Sc. (Cey) Dip. in Ed. |
| தாவரவியல் | - திரு. பாலசுப்பிரமணியம் |

(சி-6359)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**95 கலை, வர்த்தக வகுப்புக்கள்**

ஆரம்பம் 10-4-93, 10-00 மணி
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் ) இந்துசமயம் ) | — திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராஜா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. சிறிதரன் |

ஃ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
ஃ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முதல் 200 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

(சி-6335)

# ஒருதாயின் தீர்மானம்

# இருவருக்குவாழ்வளித்தது

தமிழீழ காவல் துறையில் ஸ்தாபக முதல் இன்று வரையிலான காலப்பகுதியில் முதல் மரணம் அடைந்தவர் செல்வி செல்வராஜா செல்வரஜனி. இதனால் காவல் துறையைச் சேர்ந்த அகிலேஸ்வரனும், கந்தர்மடம் வாசியான சி. தர்மராசாவும் விழிப்புலன் பெற்றுள்ளார்கள்.

**பேட்டி: மதன்**

காவல்துறையில்பொலிஸ் வேலைக்கு இடமிருப்பதை அறிந்து எனது மகள் செல்வரஜனி அவ்வேலைக்கு விண்ணப்பித்திருந்தாள். மகன் அருந்தவராசாவும் அண்மையில் மிகுந்த ஆர்வத்துடன் தனது விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார். மகன் மூப்பு. அவனுக்கு 22 வயது. இருவருக்கும் மூன்று வயது தான் வித்தியாசம். தமிழீழக் காவல்துறையில் இரு பிள்ளைகளும் சேர்ந்தால் குடும்பக் கஷ்டம் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை என்னுள் துளிர்த்தது. நாங்களும் தெல்லிப்பழை அம்பனை றோட்டில் சாதாரண வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவர்கள் தான். இப்படி எனது மகள் இந்த வயதில் இறந்து போவாள் என்று யாராவது எண்ணினார்களா என்ன? தாயார் அருந்தவமலர் மனதிலே கேள்விக்குறி எழ ஆரம்பித்தது. மனதில் பலவித உணர்ச்சிகள்.

அவர்களது சொந்த ஊர் தெல்லிப்பழை. தற்போது இடம் பெயர்ந்து மல்லாகம் நீதிமன்ற இடம் பெயர்ந்தோர் மூகாமில் வாழ்கிறார்கள். இராணுவ நடவடிக்கை காரணமாக 1992 மே மாதத்தில் இடம் பெயர்ந்தவர்கள் முற்றிலும் புதிய வாழ்க்கைக்கு ஆளாகிப் புதிய வாழ்க்கை வாழ்கிறார்கள். குடும்பத்தில் ஒட்டுமொத்தமாக ஐந்து பேர். பிள்ளைகள்- மகனும் மகளும் கட்டுவன்புலம் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். இப்போது மல்லாகம்மகா வித்தியாலயத்தில் படிக்கிறார்கள்.

அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது —

1992 ஆம் ஆண்டு முதலாம் திகதி எனது மகள் காவல் துறையில் சேர்ந்தாள் மகன் அருந்தவராசாவுக்கும் வேலை கிடைத்தது. இத்தனைவருஷத்துக்குப் பிறகு மகள் இப்போது தான் முதன் முறையாக சிறுநீரக நோய் என்றாள். யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றாள். சிறுநீரகச் செயற்பாடு இல்லை என்று டாக்டர்கள் சொன்னார்கள். இந்த நோயின் விவகாரம் முதலில் எனக்குப் புரியவில்லை. மொத்தமாக இருபத்திநான்கு நாட்கள் எனது மகள் ஆஸ்பத்திரியில் இருந்தாள். பங்குனி மாதம் 22ஆம் திகதி (1993) அவள் உயிர் அவளை விட்டு பிரிந்தது என்றார்.

இத்தனை நாள்கள் போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைகள் எல்லாம் செய்தபோது சிறுநீரகம் மாற்றலாம் என்ற எண்ணம் உங்கள் மனதில் சிறிதும் ஏற்பட வில்லையா என்று கேட்டபோது-

அந்தச் சமயத்தில் நான் யோசிக்கவில்லை. மகள் சாவதற்கு மூன்று நாள்களுக்கு முன்தான் சிறுநீரகம் மாற்றலாம் என்றார்கள். ஐந்து லட்சம் ரூபா பணமும், அன்பளிப்பாக யாராவது ஒருவர் சிறுநீரகம் ஒன்றும் தந்தால் இந்தியாவுக்குப் போய் அறுவைச் சிகிச்சை செய்து சிறுநீரகம் பொருத்தலாம் என்றார்கள். இத் திட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும் நான் ஏக்கமுற்றேன். அந்தத் தொகையை எடுக்க யாரைப் பிடிப்பது? இருந்தும் உயிரின் மேல் யாருக்குத்தான் ஆசை இல்லை? இவ்வளவு தொகையை எப்படிப் பெறுவது? பேப்பரில் போட்டு தொகைப் பணத்தைக் கேட்டிருந்தாலும் பணம் கிடைத்திருக்கலாம். ஆனால் இவ்வளவு தாமதமாகித் தெரிந்ததால் நான் பணத்தைப் பற்றி யோசிப்பதற்கு முன்பே மகளின் கதை முடிந்து விட்டது. இதற்காகப் பரிதாபப்பட்டு இப்போது பிரயோசனமில்லை.

மாலை ஐந்துமணியிருக்கும். மகளின் மரணத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியுடன் ஆஸ்பத்திரியில் நின்றபோது என்னிடம் வந்து மகளின் கண்களைக் கேட்டார்கள். அப்போது செத்த எனது மகளின் உடலில் சூடுகூடஆறியிருக்காது காவல் துறையில் இருக்கும் அகிலேஸ்வரன் என்பவருக்கு ஒரு கண் பார்வையில்லை. கண்ணுக்காக ஏங்கித் தவிப்பதாகச் சொன்னார்கள். அந்தக் காரியத்தை நான் உடன் செய்து விட்டாலோ அல்லது செய்யத் தயங்கினாலோ அதனால் பயனில்லை என்றார்கள். கண்களுக்காக நோயாளி, ஆஸ்பத்திரி கண்வார்ட்டில் தங்கி கண் கிடைக்கும் நாளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார் என்று கண்களில் உறுதியுடனும் நம்



பிக்கையுடனும் என்னைப் பார்த்தார்கள். மண்ணோடு மண்ணாகிப்போற கண்தானே என் மகளின் கண்களைக் கொண்டு மற்றவர்கள் உலகத்தைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை என் மனதில் தோன்றியது. ஏதோ நல்லது நடக்கட்டும் என்று கண்களை எடுக்கச் சொன்னேன். நம்பிக்கையான வார்த்தைகளால் நன்றி தெரிவித்தார்கள் என்று கூறினார்.

காலஞ்சென்ற செல்வரஜனியின் சகோதரர் செ. அருந்தவராசாவைச் சந்திக்க தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்குச் சென்றபோது அவர் எம்மிடம்:-

காலஞ்சென்ற செல்வரஜனி எனது சகோதரி. என்னைவிட இளையவர். வயது 19. இருவரும் கட்டுவன்புலம் பாடசாலையில் ஜி.சி ஈ. [சாதாரணம்] வரை படித்திருக்கிறோம். முழுமையாகச் சித்தியடையவில்லை. எனது தங்கைக்கு [illegible]ாகப் போகிற உணர்வு இருந்தது. கண்தானம் செய்யும்படி அவராகச் சொல்லவில்லை. ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தகாவல்துறை உறுப்பினர் அகிலேஸ்வரனுக்குக்காகத் தான் கண்களைக் கேட்டார்கள். அம்மா அப்போது ஆஸ்பத்திரியில் நின்றார். அவராகவே விரும்பிக் கொடுத்தார். எந்த வித தயக்கமும் காட்டவில்லை.

கேட்டபடியால் கொடுத்தீர்கள் என்ற தோரணையே தெரிகிறது. கேட்காது போனால்.....?

கண்தானம் செய்யலாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்போது எனது தங்கையின் மரணம் சம்பவித்திருந்ததால் அதுபற்றிய ஞாபகம் எனக்கு வரவில்லை. ஆமாம். கேட்டபடியால்தான் கண்தானம் செய்தோம்- கேட்காவிட்டால் கண்களைத்தானம் செய்யாமல் போயிருப்போம்டாக்டர் எஸ்.குகதாசன் தான்கண்களைஎடுத்தார். கண்களை எடுத்தது துலாம்பரமாகத் தெரியவில்லை. மரண வீட்டுக்கு வந்த எங்கள் உறவினர்களுக்கு கண்களைத் தானம் செய்த சங்கதி தெரியும் அவர்களும் அது பற்றி எதுவும் பேசவில்லை. இப்பொழுது நானும் எனது மரணத்துக்குப்பிறகு கண்களைத்தானம் செய்யலாம் என்று இருக்கிறேன். கண்களைத் தானம் செய்வதற்காக ஏதோ அடையாள அட்டைஅனுப்புவதாகச் சொன்னார்கள். எங்கள் விலாசத்தை எடுத்தார்கள். இதுவரை வந்து சேரவில்லை என்றார். எமது நாட்டுக்கே உரித்தான 'சிவப்பு நாடா' காரணமாக எல்லாமே தாமதம்.

ராசரெட்ணம் அகிலேஸ்வரனை யாழ். போதனா வைத்தியசாலையில் கண் சிகிச்சை வாட்டில் சந்தித்த போது-

எனக்கு ஒரு வருட காலமாக வலக்கண்தெரியாது. கண்ணில் அல்சர். கண்ணைப் பெறுவது ஆரம்பத்தில் மிகவும் கஷ்டமாக இருந்தது. பலரை வற்புறுத்தியும் உறவினர்கள் இறந்தவர்களின் கண்களைத் தர மறுத்து விட்டார்கள். செத்தவர்களின் கண்களைக் கேட்பது எமது பழக்கமாகி விட்டது. கண்களைக் கேட்டால் ஏதோ பீதி அடைந்தவர்கள் போல் காணப்பட்டார்கள், எவ்வளவு கெஞ்சினாலும் தர மறுக்கிறார்கள் ஆனால் செல்வரஜனியின் கண்களைக் கேட்டபோது அவரின் குடும்பம் கண்களைத் தர தயங்கவேயில்லை சந்தர்ப்ப சூழ்நிலையும் சரியாக அமைந்தது. 22 03. 93 பிற்பகல் 5 மணியளவில் செல்வரஜனி காலமானார். மறுநாள் காலை 10-11 மணிக்கிடையில் எனக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு கண் பொருத்தப்பட்டது. டாக்டர் குகதாசன் தான் அறுவைச் சிகிச்சையைச் செய்தார். பன்டேஜ்ஜை அவிழ்க்கும்போதுகண்பார்வை நன்றாகத் தெரிகிறது. செல்வரஜனியின் கண்கள் மூலம்தான் நான் உலகத்தைப் பார்க்கிறேன். கண் சுகப்பட்டதும் முதல் வேலையாக நான் அந்தக் குடும்பத்துக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று கூறிய அவர் தனது சொந்த ஊர் கிழக்குச்சங்கானை என்று அறிமுகப்படுத்திக்கொண்டார்.

சிற்றம்பலம் தர்மராசா.

வயது 36,சாரதி.

செல்வரஜனியின் மற்றக் கண் சிற்றம்பலம் தர்மராசாவுக்குப் பொருத்தப்பட்டுள்ளது. இவர் கந்தர்மடத்தை இருப்பிடமாகக் கொண்டவர். வார்ட்டில் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவருடைய தூக்கத்தைக் கலைக்க நான் விரும்பவில்லை. பக்கத்தில் நின்ற அவரது உறவினருடன் பேச்சுக் கொடுத்தேன். அவர் கண்மாற்றுச்சிகிச்சைக்கு காரணியாக இருந்த பின்னணியை விபரித்தார்.

எல்லோரையும் போலவே இவருக்கு கண்பார்வை நன்றாக இருந்தது. 1990 ஆம் ஆண்டு தொடங்கி இவருக்குக் கண்கள் தெரியாது. இடக் கண் சுமாராகத் தெரியும். வலக்கண் முற்றாகத் தெரியாது. இவருக்கு இது இரண்டாவது கண் அறுவைச் சிகிச்சை. முதலில் கண் பழுதடையாமல் இருக்க சிகிச்சை செய்தார்கள். இப்போது கண் பார்வைக்காக அறுவைச் சிகிச்சை மூலம் கண் பொருத்தியுள்ளார்கள் என்றார்.

## ஈழமண்! இசைத்துக் கொண்டேயிருக்கும்

ஈழ நிலமெங்கும்
இணையற்ற வீரம்
சங்க காலத் தாயை விட,
தமிழீழத் தாய்க்குலம்
பெருமை கொண்டுநிற்க,
பாரத தேசமோ......
பதை பதைத்தது.
மைந்தரின் வீரவீச்சால்
மனம் குழம்பி நின்றது.
அரிசிப் பொதி போட்டு
அரவணைப்போமென்றவர்,
ஒப்பந்த ஓலையை
எழுதி முடித்தனர்.
ஆயுதங்களும் கொஞ்சமல்ல,
அள்ளித்தான் கொடுக்கப்பட்டது.
ஈழத்தவர் நெஞ்சுரம்
எங்கே அவர்களுக்குத்
தெரியப் போகின்றது;
அன்னை மண் காக்க
ஆயுதங்களின்றியே
போராடுவாரென்பது.
தங்கள் நாட்டவர்போல்
அரிசிப் பொதியென்றவுடன்
உரிமைகளைத் துறப்போமென்று,
தப்புக் கணக்கிட்டனரோ?
மால் மருகன் வீதியில்,
திலீபன் தொடக்கி வைக்க,
மாமங்க வீதியில்,
நீயிருந்தாயம்மா.
அமைதிப் படையாக வந்து,
அவலங்களைத் தந்து,
ஆயுதப் போரிலும்,
அகிம்சைப் போரிலும்
தலை குனிந்து தேசத்தை விட்டு,
சென்று விட்டார் - எம்
தேசத்திலோ......
தொடருது தொல்லைகள்.
பட்டினி போட்டு,
பாதைகளில் மறித்து.....
செவ்வாறு பெருக்கெடுத்தோட,
வயது வேறுபாடின்றி,
வஞ்சியரும், வயோதிபரும்,
மழலையரும் மைந்தரும்,
மண் காக்க கருவிகளேந்தி,
நிற்கின்ற காட்சியைப்
பார்த்தாயா?
தேசத்துக்காய்- நின்னை
தியாகம் செய்த தாயே!
ஈழமண்; உன் புகழை,
என்றும் இசைத்துக்
கொண்டேயிருக்கும்.

– மீசாலையூர் கமலா

## பற்றுடனே தமிழீழத் தாயகத்தை மீட்போம்

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று
தொடங்கினாள்
காரிகையாள் பூபதிதாய் சத்தியத்தின் வழியிலே
புத்திகெட்ட இந்தியாவின் போக்கினையே
மாற்றினாள்
பொன்னுடலை மண்ணிற்காய் பூவையவள்
நல்கினாள்
இத்தரையில் இன்னுயிரை இலட்சியத்துக்காகவே
இறுதிவரை ஈந்து நின்று ஏற்றம் மிகக்
கொண்டவள்
பத்தினியாள் பாதையினைத் தொடர்ந்து நாமும்
சென்றுமே
பற்றுடனே தமிழீழத் தாயகத்தை மீட்போமே,

– கவிஞர் வ. யோ

# புகலிட நாடுகளில் தமிழர் வீரம்?

**நிலாந்தன்**

கடந்த மாதம் 28-ம் திகதி கனடாவின் ரொரொன்ரோ நகரில அகதித்தமிழர்கள் சிலர் இரு குழுக்களாகி தெருவில் மோதினார்கள். இச்சம்பவத்தில் துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டன. சுமார்அரை மணிநேர மோதலின் போது விவரம் புரியாத பார்வையாளர்களாய் நின்ற, வீதி வழியாகச் சென்ற, தமிழரல்லாத கனேடியர்களும் காயமடைந்தார்கள். ஆறு கார்கள் சேதமடைந்தன. அருகிலிருந்த மதுச்சாலையொன்றின் கண்ணாடிச் சுவர்களை சன்னங்கள் துளைத்துச் சென்றன. அங்கிருந்தவர்கள் சிதறி ஓடினார்கள். கடைசியாகபொலிஸ் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமையைக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

இச்சம்பவத்தின் பின்னணி பற்றி ஊர்ஜிதமற்ற தகவல்கள் வந்தபடியுள்ளன. கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்களின் படி, மேற்படி சம்பவம இரு ஊர்களுக்கிடையிலான பகைமையின் விளைவு என்று பொதுவாக ஊகிக்கப்படுகிறது.

அகதித்தமிழர்கள் கனேடியச் சட்டங்களை அதிர்ச்சிக்குள்ளாககியது மேற்படி சம்பவத்தில் மட்டும்தான் என்பதல்ல. இதற்கு முன்னரும் பல சம்பவங்கள் கனடாவில் நடந்திருக்கின்றன. சில வருடங்களுக்கு முன்பு கனடாவில் மூன்று அகதித்தமிழர்கள் ஒரு ஹெலிகொப்டரில்சென்று சிறை வைக்கப்பட்டிருந்த சர்வதேச போதைவஸ்துக் குற்றவாளி ஒருவரை சிறைமீடக முயற்சித்தார்கள். வெற்றி பெறாத இம்முயற்சியிலீடுபட்ட, ஏற்கனவே ஆயுதப்பயிற்சிகள் பெற்றிருந்த மேற்படி தமிழ் அகதிகள் மூவரும் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் என்று அப்பொழுது கூறப்பட்டது.

இருவருடங்களிற்கு முன்பு நோர்வேயிலிருந்து வந்த என்னுடைய நண்பர் ஒருவர் சொன்னார். அங்கு இருதமிழ் மாணவர்கள் ஒரு நோர்வே மாணவிக்காக பாடசாலை வளாகத்துள் சண்டை போட்டார்கள். இம்மோதலின் உச்சக்கட்டத்தில் பாடசாலை மண்டபம் ஒன்றின் பிரமாண்டமான விலை மிகக்கூடிய ஒரு கண்ணாடிச் சுவரை இவர்கள் இடித்து நொறுக்கி விட்டார்கள். இது பின்னர் பாடசாலை நிர்வாகத்தின் விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது ஒருசந்தர்ப்பத்தில் பாடசாலை நிர்வாகம் மேற்படி மாணவர்களிடம் பின்வருமாறு கூறியதாம்: ''நீங்கள் குறிக்கோள்களை எய்துவதற்காகசயனைற்அருந்தும் நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள்... சாகத் தயங்காத ஒரு இனத்தின் பிரஜைகளான உங்களைக் கையாள்வது எங்களிற்குக் கடினமாயுள்ளது.......''

நோர்வேயில், கனடாவில் மட்டும அல்ல, தமிழர்கள் புகலிடந் தேடிச் சென்ற அநேகமான நாடுகளில் அந்தந்த நாடுகளின் சட்டங்களையும, சுங்கவிதிகளையும அடிக்கடி திணறச்செய்துள்ளார்கள். அதிர்ச்சியுற வைதுள்ளார்கள்.

நோர்வேக்குள் சுவீடனுக்கூடாக சட்டவிரோதமாக தமிழ் அகதிகளை எடுத்துச் செல்லும் பிரயாண முகவர்கள் நோர்வே பொலிஸாரிடம் அகப்படும்போது தாங்கள் விடுதலைபபோராட்டத்திற்கு நிதி சேர்ப்பதற்காகவே மேற்படி தொழிலைச் செய்வதாகக் கூறுகிறார்களாம். நோர்வே பொலிஸ் இதை நம்புவதாகவும், இது ஒரு பொய்யான தகவல் என்பதை பொலிசாருக்கு நிரூபிப்பதற்காக அங்கு போராட்டத்திற்குச் சார்பான பிரசாரங்களில் ஈடுபடும் அமைப்புக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

நோர்வே 88ஆம் ஆண்டோடு மாணவர்களாக வரும் தமிழ் அகதிகளை நிராகரித்துவிட்டது. கடந்த சில வருடங்களாக நோர்வே குடும்பமீள் இணைவையும் (Family Re-union) இரக்கத்தோடு பரிசீலிக்க மறுத்துவருகிறது இத்தாலி ஒருகாலம் அகதித் தமிழர்களிற்கு ஐரோப்பாவின் நுழைவாயிலாகக் காணப்பட்டது ஆனால் அங்கு போதைவஸ்து மையங்களோடு தமிழ் அகதிகள் கொண்டிருந்த அச்சுறுத்தலான தொடர்புகள் காரணமாக ஒரு கட்டத்திற்கு மேல் இத்தாலி தமிழ் அகதிகளிற்கு தனது கதவுகளை இறுக மூடியது. இன்று, பல ஐரோப்பிய ஸ்கண்டிநேவிய நாடுகள் சட்ட விரோதமாக தமது விமானநிலையங்களை வந்தடையும் தமிழ் அகதிகள் அங்கு புகலிட அந்தஸ்து கோரும்போது (Airport Asylum) அதை நிராகரித்து வருகின்றன எண்பதுகளின் இறுதியில் இவ்விதம் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்படலாம் என்று அஞ்சிய ஒரு தமிழ் அகதி தரையிறங்கிய விமானத்திலிருந்து குதித்தார் எனினும் பிரிட்டன், கனடா, ஜேர்மனி போன்ற சில நாடுகளைத் தவிர ஏனைய அநேகமான நாடுகள் இது விசயத்தில் தமிழ் அகதிகளை இரக்கத்தோடு அணுகுவதற்கில்லை.

பிரிட்டன் தனது விமான நிலையங்களுக்கு சட்ட விரோத யணிகளை கொண்டு வரும் விமானசேவைகளின்மீது கடும் தண்டனைகளைவிதித்து வருகிறது.

சிங்கப்பூர் தனது விமான நிலையததில் சந்தேகத்துக்குரிய தமிழர்களின் பட்டியல் ஒன்றை கொம்பியூட்டர்களின் ஞாபகத்தில் நிரந்தரமாகப் பதித்து வைத்திருக்கிறது.

தமிழ் அகதி எல்லா இடங்களிலும் சந்தேகிக்கப்படுகின்றான். கறுப்புக் கடவுச் சீட்டுடன் வரும் தமிழர்களை எல்லா விமான நிலையங்களும் குற்றவாளிகளைப்போல பார்க்கின்றன.

இந்த அவமானம் கட்டுநாயக்காவிலிருந்தே ஆரம்பித்து விடுகிறது. தமிழ் அகதி அநேகமாக தன்னை ஒரு உல்லாசப் பயணி என்ற பாதுகாப்பான பொய்யைச் சொல்லிக் கொண்டு சாதுரியமாக கட்டுநாயக்காவைத் தாண்டிச்செல்கின்றான். விமானநிலையத்தில் முதலில் கடுமையான சுங்கச் சோதனைகளைக் கடந்து பயணிகள் காத்திருக்கும் அறையை நோக்கிச் செல்லும் போது சிலசமயம் இடையில் கண்ணாடியாலான ஒருசிறிய அறைக்குள் இருந்து திடீரென்று குறுக்கிடும மூத்த சுங்க அதிகாரி அவனுடைய கடவுச்சீட்டை வாங்கிப் பரிசோதிப்பார். பிறகு காத்திருக்கும் அறைக்குச் சற்று முன்பாக ஒரு வான்படை அதிகாரியிடம் அவன் கடவுச்சீட்டைக் காட்ட வேண்டியிருக்கும். அந்த அதிகாரி சில சமயங்களில் கேட்பார்... ''சிங்கப்பூர் போறது பாங்கொக் போறது மொஸ்கோ போறது...ரூறிஸ்ற் ரூறிஸ்ற்.. ?போங்க...போங்க-அங்கிருந்து லண்டன் போறது? கனடா போறது?...''

சர்வதேசவிமானநிலையங்களின் சுங்க விதிகளின்பலவீனங்களை நம்பிஅல்லது சுங்க அதிகாரிகள்ன்பலவீனங்களைநம்பி தமிழ்அகதியின்பயணம்தொடங்குகிறது அவன்இதற்குமுன்பு கேள்விப்பட்டிராத நாடுகளின் தலைநகரங்களில் தரித்துச் செல்ல நேரிடுகிறது. பெரஸ்ரோய்க்காவிற்கு முன்பு வரை சில கிழக்கைரோப்பிய நாடுகளின் தலைநகரங்களில் அவன் தரித்துச் சென்றான். தவிர கிழக்காசிய நாடுகளின் தலைநகரங்கள், சிறிய ஒதுக்குப்புற ஆபிரிக்க நாடுகளின் தலைநகரங்கள் போன்றவற்றிலும் அவன் தரித்து நிற்பதுண்டு. இன்று அவன் அநேகமாக மொஸ்கோவில் தரித்துச் செல்கிறான். அதிகம் நெரிசலில்லாத நெகிழ்ச்சியான சுங்க விதிகளையுடைய அல்லது சுங்க அதிகாரிகளை எளிதில் விலைக்கு வாங்கக்கூடிய ஏதாவது ஒரு விமான நிலையத்தை அல்லது ரயில் நிலையத்தை அவன் தாண்டினால் போதும்...

பிறகு, கையில் கனமற்ற சிறிய பயணப்பையோடு முக்கியமான பயண ஆவணங்கள் சகலதையும் அழித்துவிட்டு ''நான் ஒரு அகதி'' என்றபடி, தான் சென்றடைய விரும்பிய நாட்டின் தலைநகரை அவன் இறுதியாகச் சென்றடைகிறான்.

புகலிட நாட்டில் அவன் ஒரு உதிரி, தனது ஊதியத்தை தனதுநாட்டின் ரூபாய்களால் பெருக்கிக் கணக்கிடுகின்ற ஒரு மலிவான கூலி.

அங்கு அவனுக்கென்றொரு சமூகம் இல்லை. எனவே ஒரு கலாசார வாழ்வும் இல்லை. முகமற்ற தனித்துவமான அடையாளங்களற்ற ஒரு உதிரியாக, தெரிவுகள் மிக்கக்கூடிய ஒரு வாழ்க்கை முறைக்குள் புதிய பண்பாட்டிற்குள் அவன் எதிர்ப்பின்றிக் கரைந்துபோகிறான். விரைவில் ''எந்திரங்களின் பிற்சேர்க்கையாக'' மாறிவிடுகிறான். எனவே அருவமாகி விடுகிறான்.

இந்த முகமற்ற அருவ நிலைதான், அதாவது எல்லாவித அவமானங்களிற்கும் இசைவாக்கப்பட்டுவிட்டதான ஒரு நிலைதான் தமிழ் அகதிகளில் ஒரு பகுதியினர் புகலிட நாடுகளின் சட்டங்களை மதியாமல் நடப்பதற்குரிய ஒரு முக்கிய காரணம். அங்கு அவர்களுக்கென்றொரு கலாசார வாழ்வு இல்லை. என்பதால் ஒரு குற்றவாளியாக இருப்பதில் அவர்கள் வெட்கப்படுவது குறைவு.

மேலும் மூளை உழைப்பாளிகளையும் பிரசா உரிமை பெற்றவர்கள், வதிவிட உரிமை பெற்றவர்கள் போன்றோரில் ஒரு பகுதியினரையும் குடும்பமாகப் புலம் பெயர்ந்தவர்களையும் சிறிதளவு மாணவர்களையும் தவிர, பெரும்பாலான அகதிகள் புகலிடம் தற்காலிகமானது என்றே நம்புகிறார்கள். இதுவும் அகதிகளின் சட்டமீறல்களுக்குரிய மற்றொரு முக்கிய காரணம். அதோடு அகதிகளாய்ப்போனவர்களில பல இளைஞர்கள் முன்பு போராட்ட இயக்கங்களில் ஆயுதப் பயிற்சி பெற்றவர்களாவும் போர் அநுபவங்களை உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். இதுவும் தமிழ் அகதிகளின் குற்றச் செயல்கள் விபரீத பரிமாணங்களை பெறுவதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று.

அகதிகளின் இத்தகைய வன்முறைகள், ஐரோப்பாவிலும் ஸ்கண்டிநேவிய நாடுகளிலும் ஆசிய அகதிகளுக்கு எதிராக அதிகரித்து வரும் தாக்குதல்களை நவநாசிஸ்ட்கள் நியாயப்படுத்த ஏதுவாகிவிடும் என்பதை அங்கிருந்து வருபவர்கள் கூறுகிறார்கள். ஐரோப்பாவில் தமிழ் அகதிகளிற்கு முன்னதாகச் சென்று குடியேறிய ஆபிரிக்க அகதிகளும் தொழிற்போட்டிகள் காரணமாக தமிழ் அகதிகளைத் தாக்கி வருகிறார்கள். குறிப்பாக ஜேர்மனியின் மீள் இணைவு அங்கு ஆசியர்களைப் பயமுறுத்தும் நவநசிஸ்ட் சக்திகளை வேகபபடுத்தியுள்ளது. ஐரோப்பா கடந்த சில வருடங்களாக பெரஸ்ரோய்க்காவின் அகதிகளையும்- அதாவது கிழக்கு ஐரோப்பிய அகதிகளையும்- சுமக்கத் தொடங்கியுள்ளது. எனவே, ஐரோப்பியரல்லாத அகதிகளை அகற்றுவதில் ஐரோப்பா கூடுதல் அக்கறை காட்டி வருகிறது. இது விசயத்தில்ஸ்கண்டிநேவிய நாடுகளும ஐரோப்பாவை பின்பற்ற முயல்வது போற் தெரிகிறது.

தமிழ் அகதிகள் ஐரோப்பாவிலும் ஸ்கண்டிநேவியாவிலும் எதிர் நோக்கும் நிச்சயமின்மைகளோடு ஒப்பிடுகையில்கனடா அவர்களுக்கு அதிக பட்சம் உத்தரவாதத்தைத் தரும் ஒரே நாடாகத் தோன்றுகிறது. ஒப்பீட்டளவில்கனடா தமிழ் அகதிகளை கௌரவமாக நடத்தி வருகிறது என்பதை அங்கிருந்து வருபவர்கள் கூறுகிறார்கள். ஒரு குடியேற்ற நாடான கனடாவில் தமிழர்களுடன் நெருங்கிப் பழகும் கனேடியர்கள் பொதுவாகப் பின்வருமாறு கூறுவதுண்டாம்: ''உங்களைப் போலதான் எங்கள் பாட்டனார்கள் அல்லது முப்பாட்டனார்கள் இங்கு அகதிகளாகத்தான் வந்தார்கள்...''

உலகில் பரப்பளவில் இரண்டாவது பெரிய நாடு கனடா. அங்கு நிலப்பரப்பிற்கும் வளங்களிற்கும் உரிய சனத்தொகைச் செறிவு இல்லை. கனடாவில் பொருளாதார நெருக்கடிகள் தோன்றும்போது பொருளியல் நிபுணர்கள் நாட்டின் சனத்தொகையை அதிகரிக்கும் படி ஆலோசனை கூறுகிறார்கள். இதனால் தான், கனடா புகலிடந்தேடிவரும் தமிழர்களிடமும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் மக்களிடமும் தாராளமாக நடந்து கொள்கிறது.

கனடாவில், தமிழ் அகதிகள் முன்சொன்ன துப்பாக்கிச் சண்டை இடம்பெற்ற ரொரொன்ரோ நகரில்தான் அதிகம் செறிந்து வாழ்கிறார்கள். ஒன்றாரியோ ஏரியின் வடகரையில் அமைந்திருக்கும் ரொரொன்ரோ, ஒன்றாரியோ மாநிலத்தின் தலைநகரம். கனடாவின் இரண்டாவது பெரிய நகரம். ரொரொன்ரோ என்ற சொல் அதன் செவ்விந்திய மூலச்சொல்லிலிருந்து பெறப்பட்டது. அதன் அர்த்தம் ''கூடும் இடம்'' (A place of Meeting) என்பதாகும் என்னுடைய நண்பர் ஒருவர் இருவருடங்களிற்கு முன்பு ரொரென்ரோவிலிருந்து வந்திருந்தார். அவரிடம் ரொரொன்ரோவைப் பற்றி விசாரித்தேன். அவர் தன்னுடைய நண்பரும் கவிஞருமான திருக்கோணமலையைச் சேர்ந்த ஒருவரின் கூற்றை மேற்கோள் காட்டினார். மேற்படி கவிஞர் ஒன்றாரியோ அல்லாத வேறொரு மாநிலத்தில் வசிப்பவராம். அவர் முதன் முதலாக ரொரொன்ரோவின் மையப் பகுதியில் வந்திறங்கிய போது, இவரிடம் கேட்டாராம்... ''ஓ இது தான் ரொரொன்ரோவா? தமிழர்கள் சொறிந்து வாழும் இடமா?...''


**Modern Education Centre**
**KARAVEDDY**

**95A/L கலை வர்த்தக வகுப்புக்கள்**

ஆரம்பம்:- 10-04-93 [சனி] காலை 9மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | திரு. பவான் |
| வர்த்தகம் | — | திரு. சோதிலிங்கம் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | திரு. நடா |
| புவியியல் | — | திரு. சு. கிருஷ்ணராஜா |

(3421)

**ஜெசித்தாரா உணவகம்**

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின் தரமிகு சுவையான
உணவுப் பார்சல்கள் பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 3.30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம் :

| | | |
|---|---|---|
| மரக்கறி | – | 24.50 |
| மீன் | – | 28.50 |
| இறைச்சி | – | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை, சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி-6367)

# அடைக்கலம்

சுதாராஜ்

நான் மனைவியைத் தேடி வீட்டுக்குள் சென்ற போது அவள் குளிப்பை முடித்து, அழகான சேலையில்.......... சுவாமி தரிசித்து, பூச்சூடி. குங்குமப் பொட்டிட்டுப் புனிதமாகத் தோன்றினாள்.

''இந்த வீட்டுக்குக் குடி வந்த நாளிலிருந்து இப்பதான் என்ர மனம் நிறைஞ்சிருக்கு!'' என்றேன்.

அவள் நாணம் மேலிட, ''எப்பிடி வெளிக்கிட்டாலும் உங்களுக்கு ஏதாவது குறை தானே ? ... ... சரி, சரி! இப்பவாவது இந்தத் திருவாய் மலர்ந்தது போதும்!'' எனத் தனது மகிழ்ச்சியை மனக் குறைபோல வெளிப்படுத்தினாள்

''நான் அதைச் சொல்லயில்லை!''

''பின்னை எதை?'' என ஏமாற்றத்துடன் பார்த்தாள்.

''குருவிப் பிள்ளையள் கூடு கட்டுகினம்!''

''உண்மையாவா?''-ஆச்சரியம் அவள்முகத்தில்மலர்ந்தது.

நகருக்கு அப்பால் அமைதியான சூழலில் இடமெடுத்து நாங்கள் வீடு கட்டியதற்கே ஓர் உட்காரணம் இருந்தது. இங்கு வந்த நாளிலிருந்து எங்களுக்குள் ஓர் ஆசை - எதிர்பார்ப்பு - இந்த வீட்டில் ஒரு சரணாலயம் போல பிராணிகள் தானாகவே வந்து கூடுகட்டி வாசம் செய்ய வேண்டும் என்று. அதற்காக வீட்டைச் சூழ, பல பழமரங்களையும், பூ மரங்களையும் வளர்த்து ஒரு சோலையைப் போல ஆக்கி வைத்திருக்கின்றோம். மரங்களில் சிறிய தட்டுக்களை அடித்து வைத்து அவற்றில் சிறுதானியங்களைப் போட்டுவிடுவோம். குருவிகள் பழவகைகள் சாப்பிட வரும். பூக்களில் தேன் குடிக்கும். அணில் தானியங்களைப் பொறுக்கிச்செல்லும். ஆனால் ஒன்றுதன்னும் எங்கள்வீட்டில் கூடு கட்டிச் சீவனம் செய்யவில்லை. மரங்களில் வந்திருந்து ராகமெடுத்துப் பாடுகின்றன. தங்களுக்குள் ஏதோ பேசி மகிழ்கின்றன. ஆனால் இரவில் நித்திரைக்கு எங்கோ பறந்து விடுகின்றன, இது எங்களுக்கு ஒரு குறையாக இருந்தது. இப்போது அந்தக்குறை தீர்ந்ததுபோலோர் உணர்வில் என்பன்னே ஓடி வந்தாள் மனைவி.

குருவிகளைப் பார்த்துவிட்டு மகள் சென்னாள் : ''அப்பா! உங்கட கொண்டைக் குருவீயள் தான் கூடு கட்டுகினம்... என்ன?'' அவற்றுக்குக் கொண்டைக் குருவி எனப் பெயரிட்டதே நாங்கள் தான். உண்மையான பெயர் தெரியாது.

ஒருகையிலடங்கக்கூடியசைஸ் நீளமான வால். மேற்சிறகு பிறவுண் நிறம் நெஞ்சின் கீழ்ப் பகுதி சாதுவான வெண்மை கலந்திருக்கும். வாலின் தொடக்கம் அடிப்பாகம் சிவப்பு. தலைட்பகுதி கறுப்பு உச்சியில் எடுப்பான கொண்டை.

விடியற்காலையில் முற்றத்தில்பிரம்புக்கதிரையைட போட்டுச் சற்று நேரம் அமர்வேன். மகளும் வந்து என்னோடு இருப்பாள். அப்போது இந்தக் குருவிகள் வந்து மரக்கிளைகளில், ஒவ்வொரு கொப்பாக மாறி மாறித் தாவி இருந்து பாட்டுப்பாடும்.

நானும் மெள்ள சீக்கா (விசில்) அடித்து அவற்றைப் போல ஒலி எழுப்புவேன். மகள் விநோதமாகப் பார்ப்பாள்.

''என்னப்பா குருவியோடை கதைக்கிறீங்களா?''

''ஓமம்மா .....''

''என்ன கதைக்கிறீங்கள்?''

''எப்பிடி சுகமா இருக்கிறீங்களா?.... என்ன பெயர்எனறு கேக்கிறன்''

''என்ன பெயராம் ?''

''கொண்டைக் குருவி!''

குருவிகளுக்கென வேண்டி வைக்கப்பட்டுள்ள 'சாமை', 'வரகு'போன்றதானியங்களை மகள் எடுத்துவந்து வீசுவாள். நிலத்தில் தத்தித் தத்தி வந்து அவை தீன் பொறுக்கும்.

சில நாட்களில் குருவிகளைக் காணாவிட்டால், ''குருவியைக் காணயில்லை... கூப்பிடுங்கோ!'' என மகள் கேட்பாள். நான் சீக்கா அடிப்பேன்.

சீக்கா சத்தம் கேட்டதும் அவை வந்துவிடும். சீக்கா ஓசைக்கும், சாப்பாட்டுக்கும் இடையில் அவை ஏதோ அர்த்தத்தைப் புரிந்து வைத்திருக்கின்றன.

நாங்கள் தூரநின்று கவனித்தோம். கொண்டைக் குருவிகள் இரண்டும் ஒவ்வொரு செடிகளாகப் பறந்து சென்றன. கூடலான செடிகளுக்கு உள்ளே சென்று சோதித்துப் பார்த்து வந்தன. ஒரு செடியின் இலை சடைத்த நான்கு கிளைகள் காற்றிலாடி மரத்துக்குப் பெலப்பில்லாமல் இருந்தமையால் 'சப்போர்ட்'டாக ஒரு கம்பை நாட்டி நாலு கிளைகளையும்சேர்த்துக் கட்டியிருந்தோம். குருவிகள் கூடு அமைப்பதற்கு அது பொருத்தமான இடமாக அமைந்துவிட்டது போலும். எங்கெங்கோ பறந்து சென்று தும்பு போன்ற மெல்லிய இழைகளைக் கொண்டு வந்தன.

''அட, உண்மைதான்!'' என்றாள் என் மனைவி, இப்போதுதான் நான் சொன்ன விஷயத்தை நம்புபவள்போல. மகள் என்னிடம் ஒரு கேள்வியைப் போட்டாள்: ''அப்பா! குருவி எப்பிடிக் கூடு கட்டுகிற இடத்தை டிசைட்பண்ணுது?'' உடனே எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. வழக்கமாகவே நான்அப்பிடித் தான் - அதற்காகத் 'தெரியாது' என்ற அர்த்தமல்ல; எதையும் சிந்தித்துச் சொல்வேன்.

''மறைவான... பாதுகாப்பான இடமாகத் தேடி எடுக்கும்!''

''ஏன்?''

''அவைகளுக்குப் பயம்! குஞ்சைக் காப்பாற்ற வேணுந் தானே?''

''என்ன பயம்?...குண்டு விழுமென்றா?''

''பெரிய பறவையள் பிடிச்சிடும் தானே?... பிராந்து, வல்லூறு...''

''அப்ப...பிளேனுக்கு? பிளேன் குண்டுபோடும் தானே?...பிளேனுக்குப் பயமில்லையோ?''

அவளது கவலை எனக்குப் புரிந்தது. உள்நாட்டு யுத்தம் நடக்கிறது ..விமானங்கள் திடுதிப்பென வந்து குண்டுகளை வீசுகின்றன.

''ஓமம்மா! பிளேனுக்கும் பயம்தான்! குண்டுச் சத்தம் அதுக்கு அதிர்ச்சியாயிருக்கும். முட்டைகலங்கும்.குஞ்சுபொரியாது!''

தென்னந் தும்பைச் சுருட்டி எப்படியோ அதை ஒரு வளையம் போல ஒட்டி அலகிலே தூக்கி வந்தன. தூர ஒரு மரத்தில் இரண்டும் இருந்து,எச்சரிக்கையாக நாலாபுறமும் நோட்டமிட்ட பிறகு ஒன்று தும்பு வளையத்தைக் கொண்டு செடியினுள்ளே போகும்.அதுமீண்டு வரும்வரை மற்றது எல்லாப் பக்கமும் நோட்டம் பார்த்தவாறே இருக்கும்.

மூன்று நாட்களாக ஓய்வொழிச்சல் இல்லாது தூரத்தூரப் பறந்துசென்று ஒவ்வொரு தும்பாகக்கொண்டு வந்த வேலை முடிந்திருந்தமையால், மெதுவாகச் சென்று எட்டிப்பார்த்தேன்.

ஒருபாதிச்சிரட்டையின் அளவில் மிக நேர்த்தியாகத் தும்பு வளையங்களை அடுக்கிஅடுக்கி, மென்படுக்கையாக அந்தக் கூட்டை அமைத்திருந்தன.

''பாப்பம்! அப்பா. நானும் பார்க்க...காட்டுங்கோ!'' என மகள் அங்கலாய்த்தாள். அவளைத் தூக்கி, செடியினுள் உயரத்திலிருந்த கூட்டை இலைகளை விலக்கிக்காட்டினேன்.

கொண்டைக் குருவிகள் இரண்டும் ஒன்றையொன்று அணைத்துக்கொண்டுதூர மரக்கிளையிலிருந்து எங்களையே பார்த்துக்கொண்டிருந்தன. நாங்கள் அப்பால் விலகினோம். கூடு அமைந்திருக்கும் அந்தச் செடியை வேறுபிராணிகள் அண்மித்தால் மின்னல் வேகத்தில் பறந்து போய்த் தாக்கிஅவற்றைக் கலைக்கும்குருவிகள்.எங்களை நிதானமாகப்பார்த்துக்கொண்டிருப்பது ஆச்சரியத்தை அளித்தது. 'எங்களால் தங்களுக்குஎவ்வித ஆபத்துமில்லை' எனஅவை நம்புகின்றன போலும்!

இதுஎங்களுக்குநல்லபொழுது போக்காக அமைந்து விட்டது என்றேசொல்லலாம்! நாட்டில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக எனக்கு அலுவலகமும் இல்லை ... பிள்ளைக்குஸ்கூலும் இல்லை. முற்றத்தில் கதிரையைப்போட்டு அமர்ந்து விடுவோம்!

''கீ...கீ ..''

புதிய குரல் கூட்டிலிருந்து கேட்டது. குருவி எத்தனை முட்டைகள் இட்டது, எத்தனை குஞ்சுகள் பொரித்தன போன்ற விபரங்கள் எங்களுக்குத் தெரியாது.அதைப் பார்க்கப்போனால் குருவிகள் குழப்பமடையக்கூடும் .. மிரட்சியில் வேறுஇடத்துக்கு மாறிப்போய் விடக்கூடும் என்பதில் நாங்கள் எச்சரிக்கையாக இருந்தோம்.

''கீ!... கீ!... கீ!...''

''அநேகமாய் ரெண்டோ அல்லது மூன்று குஞ்சுகள் இருக்கும்!'' என எனது உத்தேசத்தைத் தெரிவித்தேன். ஒரு ஊகம்தான். தற்செயலாக அதுஒரேஒரு குஞ்சாகவும் இருக்கலாம். பெரிதுபடுத்திச் சொன்னால் கேட்கிறவர்கள் சந்தோஷப்படுவார்கள் என்ற எண்ணம்.

''அப்பா! குஞ்சுகளை நாங்கள் வைச்சு வளர்ப்பமா?''

''வளரட்டும் ..இப்பஅதுகள் சின்னக் குஞ்சுகள் தானே!''

ஆனால் அதற்கு 'சான்ஸ்' இல்லாமற் போய்விட்டது! ஒருநாள் பகற்பொழுது அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தேன் இரவு முழுவதும் ஓயாத குண்டுச் சத்தத்தினால் உறங்க முடியவில்லை முகாமிலிருந்து ஏவப்படும் குண்டு எங்கெல்லாம் விழுந்து யாரையெல்லாம் பலியெடுக்கிறதோஎன்ற பதற்றம்.ஒருவேளை அது இந்தப் பக்கமும் வந்து விழுமோ? மகளை கொங்கிறீட் ஃபிளாட்டின் கீழ் படுக்க வைத்துவிட்டு நானும் மனைவியும் விழித்துக் கொண்டிருந்தோம்.

காலையில் சத்தங்கள் ஓய்ந்திருந்தன.பத்திரிகையை வாசித்தவாறு கதிரையிலிருந்து அப்படியே கண்ணயர்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் மனைவியின் குரல் கேட்டது!

''ஓடிவாங்கோ! ஓடிவாங்கோ!''

முற்றத்தில் நின்றவாறு மனைவி பதறிக்கொண்டு நின்றாள்.

''இஞ்ச ஓடி வாங்கோ!''

எழுந்த வேகத்தில் மகளையும் தூக்கிக்கொண்டு மறுபக்கமாகப்பதுங்கு குழியை நோக்கி ஓடினேன். குண்டுவீச்சு விமானம் வருவதாக இருக்கலாம். அதுதான் மனைவி இப்படிப் பதறுகிறாள்.

நான் ஓடுகிற ஓட்டத்தைப் பார்த்து மனைவி சினங்கொண்டாள். ''ஏன் இப்பிடிப்பயந்து சாகிறியள்?''

அப்போது தான் நிதானித்துப் பார்த்தேன். விமானத்தின் இரைச்சல் ஏதும் கேட்கவில்லை. ''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்...'' என்ற கதைதான். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கையிலிருந்த மகளைக் கிடத்திவிட்டு... மனைவி அருகில் போனேன். ''செண்பகம்! குருவிக் குஞ்சு ..'' எனத் தடுமாறியபடி குருவிக் கூட்டுப் பக்கம் கையைக் காட்டினாள். என்னையும் பதற்றம் பிடித்துக்கொள்ளக் கூட்டை நோக்கி ஓடினேன்.

குருவிக் கூடு தும்பு தும்பாகச் சின்னா பின்னமாகியிருந்தது. குஞ்சுகளைக் காணவில்லை. யுத்த நடவடிக்கையால் காணாமற்போன தங்கள் பிள்ளைகளின் கதி அறியாது பதறும் பெற்றோர்களைப் போல, பெரிய குருவிகளிரண்டும் அவலக் குரலில் கத்தியவாறு சுற்றிச் சுற்றிப் பறந்தன... பறந்து பறந்து தேடின. செண்பகம் கச்சிதமாகத் தனது வேலையை முடித்திருந்தது. செண்பகம் பொல்லாத பட்சி. சிவந்த, அனல் கக்குவது போன்ற கழுகுக்கண்கள். குத்திக் கிழிக்கும் கூரிய சொண்டு (அலகு). சிறிய பாம்புகளையும், விஷப் பூச்சிகளையும் தனது ஆகாரமாக 'லபக்' கென விழுங்கக் கூடியது. பொதுவாக இது விஷ ஜந்துக்களை ஒழித்துக்கட்டும் பிராணி என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் ஒன்றும் அறியாத, அப்பாவியான சிறு ஜீவன்களையும் சாப்பிட்டுஏப்பம் விடுகிறதா?

நான் சோர்ந்து போனேன். மனைவி அழுவாரைப் போல நின்றாள். ''குஞ்சு... செத்துப் போச்சா?'' என மகள் கேட்டாள். அவள் கண்களில் நீர் துளிர்த்து வந்தது.

'யுத்த நடவடிக்கைகளால் நவம்பர் மாத இறுதிவரை வட பகுதியில் 16,545 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன?' எனச் சற்று முன்னர் வாசித்த பத்திரிகைச் செய்தி கூட என்னைப் பெரிதாகப் பாதிக்காதது போலிருந்தது. அழுது குளறும் இந்தக் குருவிகளுக்கு எப்படி ஆறுதல் கூறமுடியும்?

மீண்டும் போய்க் கதிரையில் விழுந்தேன். தூக்கத்திலாழ்ந்து ஏதோ அர்த்தமில்லாத அரைக் கனவுகளில் மூழ்கிவிட்டேன் போலிருக்கிறது.

''ஓடி வாங்கோ!ஓடி வாங்கோ!'' முற்றத்தில் நின்றவாறு மனைவி திரும்பவும் பதறிக் கொண்டிருந்தாள்.

''இஞ்ச ஓடி வாங்கோ... அந்தா பாருங்கோ! எவ்வளவு சின்னக்குஞ்சு? குருவிக்குஞ்சு!''

குருவிக்குஞ்சா? திரும்பிப் பார்த்தேன். அந்தப் பெரிய 'கேற்'றின் கதவு இடைவெளியூடு தத்தித்தத்தி வந்தது. அப்போதுதான் நடைபழகும் ஒரு குழந்தையைப் போல நடக்க முடியாது கஷ்டப்படுவது தெரிந்தது. எனினும் இங்கிதம் தெரிந்த ஒரு பெரிய ஆளைப் போல வாசலில் நின்று ''கீ! கீ!'' எனக் கூப்பிட்டது. 'உள்ளே வரலாமா?' எனக் கேட்பது போல முனகியது. காதுக்குச் சரியாக எட்டாமல் முனகும் குரல்.

ஓடிப்போய் அதைத் தூக்குவதற்காகக் கையை நீட்டினேன். அப்படியே நிலத்தோடு படுத்துக் கொண்டது பயத்தில். கையிலெடுத்த போது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அதன் நெஞ்சு துடித்துக் கொண்டிருப்பதைக் கையில் உணர முடிந்தது. அப்போதும் முனகும் குரல் ''கீ...கீ''.

''அப்பா? காட்டுங்கோப்பா பாப்பம்'' என் மகள்.

''எங்க பாப்பம்...? என்ன, உங்கட... குருவிக்குஞ்சு தானே?'' - என் மனைவி. கையை மெதுவாக நீக்கிப் பார்த்தோம் அப்போது தான் இறகுகள் முளைக்கத் தொடங்கியிருந்தன- மீன் செதில்களைப் போல.

''எவ்வளவு சின்னக்குஞ்சு!'' என மகிழ்ந்தவாறே, மகள் அதன் முதுகில் தன் விரலால் தடவினாள். அது உடலைச் சிலிர்த்து... ''கீ!கீ!''. பழைய சம்பவம் ஒன்று நினைவுக்குவந்தது.

இந்த வீட்டுக்கு வந்த புதில் ஒரு தென்னை மரத்தடியில் எங்கள் கண்களில் முதலில்பட்டது கலைக்கப்பட்டிருந்த ஒரு கூடுதான். தாறுமாறாய்ச் சிதறிக் கிடந்த தும்புகளையெல்லாம் விலக்கிவிட்டுப் பார்த்தோம். உள்ளே எதையும் காணோம். ஏதோ ஒரு துஷ்டப் பிராணிகூட்டை சம்ஹாரம் பண்ணியிருக்கிறது என்பது புரிந்தது. பாதிக்கப்பட்டது எதுவோ என்றுநாங்கள் விசனித்திருக்கையில்தான் அந்தச் சத்தம் வந்தது.

'கீச்...கீச்' என்ற மெல்லியதான சத்தம்.

ஒரு செடியின் பின்னால், மூலையில் அரண்டபடி காட்சியளித்தது ஒரு அணில்குஞ்சு. பெரிய அணிலைப் போல முழுமையாக ரோமம் முளைத்திருந்தாலும், தானாகத் தீன் எடுக்கும் வயது வந்திருக்கவில்லை. தாயைப் பிரிந்து தவிக்கிறது என்பதை மிகவும் ஹீனமான 'கீச்...கீச்..' சத்தத்தின் மூலம் அது காட்டியது. அதை மெதுவாக எடுத்து என் உள்ளங்கையில் வைத்துக் கொண்டேன். தன்னுடைய அழகிய வாலைச் சுருட்டிக் கொண்டு

(7-ம் பக்கம் பக்கம்)

பட்டங்களை

இவர்கள் நூல்நிலையங்களைப் பயன்படுத்துகின்றார்கள் என்று கூறிவிடமுடியாது. இவர்களது சிந்தனையோட்டம் குறுகிய வட்டத்திற்குள் முடக்கப்படுகின்றது. இவர்களின் விடைத்தாள்களில் திறனாய்வுகளோ அன்றி விமர்சனம், பரிசீலனை என்பனவோ இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது இதன்படி இவர்கள் பாடமாக்கி பரீட்சை எழுதும் தவறான பாதையைக் கைக்கொள்பவர்களாக மாறும் இயந்திரங்களாவதற்கு சந்தர்ப்பம் அதிகம். இது எமது பகுதிகளின் இன்றைய நிலைக்கு என்ன பிரயோசனத்தைக் கொடுக்கும்? வெளிவாரி மாணவர்களிற்கு தகுந்த விரிவுரையாளர்கள் மற்றும் பரிசோதனைக்கான ஆய்வுகூட வசதிகள் இல்லை என்பதற்காக புள்ளிகளில் சலுகை வழங்க முடியுமா? பட்டங்கள் வியாபாரப் பொருள் இல்லை என்பதால் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும்படி யாரையும் தூண்டும் விதத்தில் பல்கலைக்கழகம் செயற்பட வேண்டிய அவசியமில்லை.

ஒரு பெரும்பாக மட்டத்தில் வெளிவாரியாக பட்டதாரிப் பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மனநிலை தமது பெறுபேறுகள் பொறுத்து தரக்குறைவானதாகும். பெரும்பாலான வெளிவாரி மாணவர்கள் திறமைச்சித்தி பெற வேண்டுமென்ற ஆர்வத்தில் படிப்பவர்களல்ல. பரீட்சை எழுதுபவர்களுமல்ல. அவர்களுக்கு தேவை பட்டத்தைப் பெறுவதே அதற்காக அவர்கள் மிகவும் குறைந்த புள்ளிகளைப் பெற்று அதன் மூலம் பட்டத்தைப் பெற்றுக்கொள்வதையே தமது வெற்றியாகக் கருதுகின்றனர். ஆகவே குறைந்த சித்தியை வழங்கும் போது கூட தரத்தைப் பேணுவது அவசியத்திலும் அவசியமானதாகும். ஒரு தளர்வு நிலையில் பட்டங்கள் அனேகமான வெளிவாரி மாணவர்களிற்கு கிடைக்கக் கூடியதாக இருந்தால் அந்நிலைமை எமது பகுதியிலிருந்து அவர்களை கொழும்பு நோக்கி நகர்த்துவதற்கே இடமளிக்கும். இந்நிலைமை சாதாரண நிலையில் எமது பகுதிக்குக் கிடைக்கவிருந்த சேவைகளை பட்டங்களை வழங்குவதனூடாக தடுப்பதாகவே அமையும்.

மேலும் இன்றைய இக்கட்டான சூழல்களைச் சமாளிக்கும் விதத்திலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் வெளிவாரி கற்கை நெறிகள் அமைவது அவசியமானது. பட்டதாரிகளை தொகையளவில் உருவாக்கிப் பெருமைப்படாமல் வகையளவில் உருவாக்கி பெருமைப்படுவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தரத்திற்குச் சிறந்தது என்பதை யாவரும் நன்கறிவர்.


## மருதடி விநாயகர் மகோற்சவத்தில்

# சுரபியின் பரிசுத் திட்டம்

❋ இலாபத்தை ஈட்டுதல் நமது இலக்கல்ல.... இன்றைய காலத்தடையை உடைத்து எழுந்து நடப்பதே எமது இலக்கு.

உங்கள் உடலுக்கு உறுதியூட்டும் ஊட்டச் சத்துக்களை அள்ளி வழங்குகிறது சுரபி பழரசப்பானங்கள்.

மகோற்சவ காலத்தில் சுரபியின் பல்லாயிரக்கணக்கான "றெனோல்ட் பேனாக்கள்" உங்களுக்காக காத்திருக்கின்றன.

பரிசுக்கு முந்துங்கள் வெற்றியை ஏந்துங்கள்

பரிசினை வென்றிட நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:-

சிறிதும் சேதமில்லாத வெற்று ஜாம் போத்தல்கள், வெற்று 300ml Fanta, Coca Cola Pepsi-Cola, Sprite, Mirinda போத்தல்கள், பியர் மற்றும் கோடியல் போத்தல்களை கோவில் வீதியில் உள்ள விற்பனை நிலையத்தில் கொடுத்து ஒவ்வொரு போத்தலுக்கும் ஒவ்வொரு "றெனோல்ட் பேனாவை" இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்துடன் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பேனா மூடிக்குள் எம்மால் அடையாளமிடப்பட்ட "லேபல்" காணப்பட்டால் மேலும் ஒரு பேனாவை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பு -

சுரபியின் தயாரிப்புக்களான மா, தோடை, எலுமிச்சை, திராட்சை, நெல்லி ஆகியவற்றிலிருந்து தயாராகும் மென்பானங்கள், கோடியல், ஜாம், தக்காளி, சோஸ், ஊறுகாய், மோர்மிளகாய், அப்பளம் மற்றும் கம்பு மா, குரக்கன் மா, உழுந்துமா ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகளை எம்மால் கோவில்வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய்.

[சி-6342]



# A/L 95

கலை - வர்த்தகம்

ஆரம்பம்:- 10. 4. 93

காலை 8 மணி

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி-6352]



# பாரதிதாசன் கல்வி நிறுவனம்

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# A/L 95 கலை, வர்த்தகம்

நேர அட்டவணை

| ஆசிரியர் | பாடம் | சனி, ஞாயிறு நேரம் |
|---|---|---|
| திரு. பசில் | வர்த்தகம் | 7.00 — 8.00 |
| திரு. பாலா | இந்துநாகரிகம் | 8.00 — 9.00 |
| திரு. கொலின்ஸ் | கிறிஸ்தவம் | 8.00 — 9.00 |
| திரு. சௌந்தி | கணக்கியல் | 9.00 — 10.00 |
| திரு. வரதராஜன் | பொருளியல் | 10.00 — 11.00 |
| திரு. மனோகரன் | அளவையியல் | 11.00 — 12.00 |
| திருமதி மீரா | தமிழ் | 12.00 — 1.00 |
| திரு. ஜோசப் | புவியியல் | 1.00 — 2.00 |
| திரு. பஞ்சாட்சரம் | அரசியல் | 2.00 — 3.00 |

[சி-6347] ஆரம்பம் : 10-04-93 சனி






1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் (ஜாம் அல்லது நெல்லிரசம்) கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு - சுவர் கடிகாரம்

2-ம் பரிசு - எவர் சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்

3-ம் பரிசு - மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்

மேலும் 10 ஆறுதல் பரிசுகள்.

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்டசீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

1) ரேஸ்லைன் இன்டஸ்றீஸ்-14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2) அறிவகம் - சாவகச்சேரி.
3) சுபாஸ் பேக்கவுஸ் - நெல்லியடி.
4) சுந்தரம் அன் சன் - சுன்னாகம்.
5) சித்திவிநாயகர் நூல்நிலையம்-ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6317)



# NEW
# SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக - யாழ்ப்பாணம்

# 95 A/L
## WEEKEND CLASSES

| | | |
|---|---|---|
| Chemistry | - 9-00 | திரு. சண் |
| Botany | - 11-00 | திரு. குணசீலன் |
| Zoology | - 12-00 | திரு. தம்பிராஜா |
| Physics | - 12-00 | திரு. கணேசன் |
| Chemistry | - 1-00 | திரு. மணியம் |
| Physics | - 2-00 | திரு. சோதிலிங்கம் |
| Pure ) Applied ) Maths | - 4-00 | திரு. வெக்டர் |

**10-04-93 சனிக்கிழமை முதல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

குறிப்பு: மாணவர் தொகை 200 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி-6355)

# பட்டங்களை மலிவாக்கும் வெளிவாரி பட்டப்படிப்பு

**யோ. ஜெயகாந்தன்** (அரசியற் சிறப்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் போராட்ட சூழலொன்றில் வெளிவாரிக் கற்கை நெறியை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வழி வழங்கப்படும் பட்டங்கள் மலிந்து போகாமற் பார்த்துக் கொள்ளும் பாரிய பொறுப்பொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உண்டென்று கூறுமிடத்து அது எந்தவகையிலும் திறமைக்கு உரிய இடம் கொடாமை என்று அர்த்தப்படாது.

உள்வாரி மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிமாவட்டத்தவர்கள்என்பதால் அவர்களின் பொருளாதார இறுக்கம் இதன் வழி ஏற்பட்டு கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கான கடதாசிகள் வழங்குதல், விடுதியிலும், வெளியிடங்களிலும் உணவிற்கான பணத்தைச் செலுத்துதல். அடிக்கடி வரும் பல்கலைக்கழக கொண்டாட்டங்களிற்கு பணம் கொடுத்தல் போன்ற நடவடிக்கையினூடே இலகுவாக வெளிப்படுவதாகவும் இருந்தது. இந்நிலைமையை ஒரு பெரும்பாக மட்டத்தில் வெளிவாரி மாணவர்களில் காணமுடியாது. ஆனால் ஒரு புறம் உள்வாரி மாணவர்கள் எமது பகுதிக்கேற்ற விதத்தில் எதிர்பார்க்குமளவு அறிவியற் செயற்பாட்டைக் கொண்டிராத போது மறுபுறம் வெளிவாரியான பட்டங்களை ஊக்குவிப்பதால் ஒரு பட்டதாரிக் கூட்டத்தை இச்சமூகம் புறந்தள்ளி விடுவதற்கே இடமளிக்குமென்றால் இது எமது சமூகத்தை திரிபுநிலைக்குட்படுத்துவதாக அமையும். எமது பகுதிக்கு அவசியமான பிரச்சினைகளில் கவனத்தைச் செலுத்த வேண்டிய இவர்கள் பட்டங்கள், பதக்கங்களைப் பெற்று அதற்கான கௌரவத்தை எதிர்பார்ப்பவர்களாக மாறுமிடத்து அறிவியற் தேக்கம் ஒன்று ஏற்படுவது தவிர்க்க முடியாமலிருக்கும்.

இன்னொருவகையில் வெளிவாரி மாணவர்கள்வார இறுதி நாட்களில் மட்டுமே பாடங்களைப் பயில்பவர்களாகவும் வாரநாட்களில் தனியார் மற்றும் அரசாங்க சேவையாளர்களாக கடமையாற்றுபவர்களாகவும் பெருமளவிற் காணப்படுகின்றனர். இந்நிலையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அடைக்கலம்

அடைக்கமாகப் படுத்துக்கொண்டது என் உடல் சூடு அதற்கு இதமாக இருந்திருக்க வேண்டும்.

அந்த அணில் குஞ்சுக்கு முதலில் ஏதாவது ஆகாரம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தவனாய், மகளை அழைத்து ஃப்ரிஜ்ஜில் இருந்து பால் கொண்டு வரச் சொன்னேன். கிண்ணத்தில் இருந்த பாலை ஒரு இங்க் பில்லால் எடுத்து அந்த அணில் குஞ்சின் வாயில் விட்டேன். அது முகத்தை உதறி பாலைக் குடிக்க மறுத்தது ஏன் பாலைக் குடிக்க மாட்டேன் என்கிறது என்று நான் விழித்தேன். அப்போது என் மனைவி, 'உடம்புச் சூட்டில் தாய்ப்பால் கொஞ்சம் வெதுவெதுப்பாக இருக்கும்' என்று எடுத்துச் சொல்லிய பிறகு தான் உறைத்தது. அவள் சொன்ன மாதிரியே பாலை இளஞ்சூடாக்கிக் கொடுத்தபோது அந்த அணில்குஞ்சு குடித்தது!

ஆகாரம் எடுத்துக்கொண்ட அந்த அணில் குஞ்சு, தன்னிச்சையாகப் போகட்டும் என கொண்டுபோய் தென்னை மரத்தின் அடியில் விட்டேன்! கீச் கீச்... என்று மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்ததே தவிர, மரம் ஏறிச் செல்ல அதற்குத் தெரியவில்லை. எங்களை ஒரு ஏக்கத்தோடு பார்த்தது அது. 'என்னை இப்படியே அநாதையாக விட்டு விடுவீர்களா?' என்கிற கேள்வி அதன் பார்வையில்.

''இந்த அணில் குஞ்சை நாங்கள் வைச்சு வளப்பமா?'' என மகள் ஆசைப்பட்டாள். அதற்கு ''இராமர்'' என்ற பெயரையும் சூட்டிவிட்டாள். வெகு சீக்கிரத்தில் 'இராமர்' எங்கள் குடும்பத்தில் ஒருவனாகி விட்டான். தினமும் நாங்கள் சாப்பிடும்போதெல்லாம் அவனும் சுயாதீனமாகப் பக்கத்தில் வந்து அமர்ந்து அதற்கு வைக்கும் உணவை தன் முன்னங்கைகளால் எடுத்துத் தின்னுவான், அந்தக் காட்சியே அலாதி. அழகாக இருக்கும். அதைப் பார்த்து மகள் கைதட்டி ஆனந்தப்படுவாள்.

''உடலில் தெம்பும், பலமும் கூடிவிட்ட இராமரை சுதந்திரமாக உலாவ விட்டுடலாம்'' என முடிவெடுத்தோம். அவனை இந்த முறை தென்னை மரத்தின் அடியில் கொண்டு போய்விட்டபோது, இதற்கு முன்னால் ஏதோ பயிற்சி பெற்றது போல், சரசரவென்று உச்சிக்குச்சென்று திரும்பி, எங்களைப்பார்த்து வாலைத் தூக்கித் தூக்கி ஆட்டி கீச்... கீச்' என்றான். 'இனி என்னைப் பற்றிப் பயம் வேண்டாம்' என அவன் எங்களுக்குச் சொல்லுவதுபோல் இருந்தது. இந்த அனுபவம் மகளுக்கும் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

''அப்பா! அணிலைப்போல இதை நாங்கள் வைச்சு வளப்பமா?'' என்னிடத்திலும் அந்த ஆசை தோன்றியிருந்தாலும், அது எப்படிச் சாத்தியமாகும் என்ற கவலையும் கூடவே இருந்தது. எனினும் ''ஓமோம்! வளர்க்கலாம்!'' எனச்சொல்லி வைத்தேன்.

'ஐயோ பாவம்! சின்னக் குஞ்சு! தீனை கொத்திச் சாப்பிடக் கூடத் தெரிஞ்சிருக்காது...செத்துபோயிடும்!' எனத் தனது அச்சத்தைத் தெரிவித்தாள் மனைவி.

''விரலாலை சொண்டைத் திறந்து ... ஊட்டிவிடலாம் தானே?

''அதுக்கு என்ன சாப்பிடக் கொடுப்பீங்கள்?''

''வரகு, சாமை, பழவகைகள்''

''நல்லாய்த்தான்! நீங்கள் நினைக்கிறது மாதிரியில்லை! இது குழந்தை! பதப்படுத்தாமல் குடுத்தால் தொண்டையிலேயே அடைச்சுச் செத்துப் போயிடும்!''

'அவள் இரண்டாவது முறையாகவும்செத்துப் போய் விடும்' என்ற வார்த்தையை பாவித்ததும் நான் உசாரடைந்தேன். குருவிக்குஞ்சை வளர்ப்பதானால் சாப்பாடு ஒரு பிரச்சினைதான், குருவிகள், குஞ்சுகளுக்கு என்ன ஊட்டுகின்றன என்று தெரியவில்லை. பூச்சி புழுக்களா, அல்லது பழவகைகளா...? அவற்றை தங்கள் வாயிலேயே மென்று பதப்படுத்திக் கொடுப்பதாகவும் இருக்கலாம்! பூச்சி புழுக்களை என் வாயில் போட்டு மெல்வதாவது...

குருவிக் குஞ்சைக் கண்ட சந்தோஷத்தில் நாங்கள் கலகலத்துக் கொண்டிருக்க கொண்டைக் குருவிகள்பறந்து வந்தன. எங்களைச் சுற்றிப் பறந்து கீச்சிட்டு முறையிட்டன. மரக்கிளையில் போயிருந்து பார்த்தன. சற்று வித்தியாசமான தொனியில் அழுவது போல குரல் எழுப்பின. ஆ! இந்தக் குருவிகள்எல்லாம் எவ்வளவு அருமையாகத் தங்கள் குதூகலத்தையும், மகிழ்ச்சியையும், வேதனைகளையும், சோகங்களையும் தெரிவிக்கின்றன.

தாயின் குரல் கேட்டு குஞ்சு கத்தத் தொடங்கியது. ''பாவம்! அதுக்கு பசிக்குது போல - - - தாயும் வந்திருக்கு விடுங்கோ போகட்டும்!

ஒரு மரக்கிளையில் குருவிக் குஞ்சை விட்டோம். தாய்க் குருவி அண்மையில் பறந்து வர இது வாயைப் பிளந்து கொண்டு கத்தியது. தாய் தீன் ஊட்ட எத்தனிக்கையில் எங்கிருந்தோ அந்தச்செம்பகம் பறந்து. குண்டு வீசப்போகும் விமானத்தைப் போல் குத்திப் பதிந்து தாக்க வத்தது. குருவிகள் இரண்டும் தொலைவில் பறந்து போய் இருந்து அவலக் குரல் எழுப்பின. குஞ்சு 'தொப்' பெனக் கீழே விழுந்தது. ''கீ...கீ...''

அடைக்கலம் தேடிவந்தகுஞ்சைத் திரும்பவும் அந்த யமனின் கையில் கொடுக்கப் பார்த்தோமே என்ற கவலையுடன் ஓடிப்போய் தூக்கினோம். நல்லவேளையாக காயம் ஏதும் பட்டிருக்கவில்லை. குருவிக்குஞ்சை கையில் வைத்துக் கொண்டு ..இனி என்ன செய்யலாம் என ஆராய்ந்தோம். அப்போது மனைவி ஒரு திட்டத்தைச் சொன்னாள்.

''கிளிக்கூடு போல... கம்பி வலையால்அடைச்ச கூட்டிலை குஞ்சை விட்டு ஒருமரத்திலை கட்டி விடலாம். வலையைஒர் இடத்திலே கொஞ்சம் நீக்கிப் பெரிய ஓட்டைஆக்கிவிட்டால் தாய்க்குருவி அதற்குள்ளாலை எட்டித் தீன் குடுக்கும்...குஞ்சு பறக்கக் கூடியதாய் வளர்ந்தவுடனே திறந்து விடலாம்.''

இது நல்ல ஐடியாவாகப் பட்டது. நான் குதூகலத்துடன் சொன்னேன்; ''அப்ப எங்கட வீட்டிலையும் ஒரு அகதி முகாம்''

''அகதி முகாமோ... என்னவோ... அடைக்கலம் எண்டு வந்த ஜீவனைப் பாதுகாக்க வேண்டியதுஎங்கட பொறுப்பு''

இதற்குப் பிறகு நாங்கள் துரித கதியிற் செயற்பட்டு கூட்டிலே குஞ்சை விட்டு மரக்கிளையில்கட்டினோம். இப்படி செயற்கையான கூட்டில் அடைக்கப்பட்டிருக்கும் குஞ்சுக்கு ஊட்டுவதற்கு தாய்க் குருவி வருமா என்ற சந்தேகம் இன்னும் எனக்கு இருந்தது.

கொண்டைக்குருவிகள் ஒவ்வொரு மரமாகப் பறந்து பறந்து குஞ்சைப்பெயர் சொல்லி அழைத்தன. குஞ்சு வாயைப்பிளந்து குரல்கொடுத்ததும் ஒரு குருவி சட்டெனப் பறந்து வந்து கூட்டுக்கு அண்மையில் இருந்தது. கூட்டின் ஒவ்வொரு வலைக்கண்கள் ஊடும் முகத்தைச் செலுத்தி உள்ளே நுழையப் பிரயத்தனம் செய்தது. அந்தப் பெரிய ஓட்டை ... அதனூடு தலைமிக இலகுவாக உட்சென்றதும் ... இன்னும் கொஞ்சம் முயற்சித்து ம்...ம்... எனச் சிறகை ஒடுக்கி ... இழுத்துஉள்ளே போய்விட்டது. 'அப்பாடா' என மூச்சு வாங்குவதற்குள் அதற்குப் பயம் பிடித்துக் கொண்டது போலும். 'பிள்ளையைச் சிறை மீட்க வந்து நானும் அகப்பட்டுக் கொண்டேனா?'— குருவி வெளியேறுவதற்காகச் சிறகடித்து கூட்டிற்குள்ளேயே பறந்து பறந்து வலைக் கண்களில் முகத்தைக் குத்திக்குத்தி அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தது.

ஓடிப்போய்க்கதவைத் திறந்தேன். ''அப்பா! திறக்க வேணாம்! இரண்டையும் வளர்த்தால் ... தாய் குஞ்சுக்குத் தீன் குடுக்கும் தானே?''

''இல்லையம்மா! பாவம், அது பயப்படுது போகட்டும்!''

கதவைத் திறந்ததும் எய்த அம்பு போல வெளியே பறந்து போனது. ஆனால் தாய்ப்பாசம் யாரை விட்டது? சிறு பூச்சி புழுக்களைக் கொத்திக் கொண்டு திரும்பவும் கூட்டுக்கு அண்மையாக வந்திருந்து சோகமாக அழத் தொடங்கியது. மற்றது பக்கத்தில் வந்து வேறு தொனியில் பேசியது.

கீச்! கீச்! பசியில் அழும் குழந்தைக்கு ஒரு புதிய குரலில் ஆறுதல் சொன்னவாறு மெள்ள மெள்ள ஒவ்வொரு இளையாக முன்னேறி — எதற்கும் துணிந்தது போல் சட்டெனக் கூட்டுக்கு அண்மையில் பறந்து சென்று வலைக் கண்கள் ஊடு அந்தப் பெரியதுளையைத்தேடி 'ம்... ம் ...' ஒரே மூச்சில்உள்ளே போய்விட்டது.

நாங்கள் ஆவலுடன் பார்த்தோம் ''சரி! சரி! குஞ்சுக்குத் தீன் குடுக்குது'' எனத் துள்ளிக் குதித்து மகிழ்ந்தாள். மகள்.

குஞ்சுக்குத் தீன் ஊட்டிய பின்தான் குருவிக்கு அடுத்த பிரச்சினை தெரிஞ்சுது —இனி எப்படி வெளியே போவது? சிறகடித்து அதே எத்தனிப்பு வலைக் கண்களில் முகத்தைக் குத்திக் குத்தி...

கதவைத் திறந்து விட்டபோது கவனித்தேன்; பாவம் தாய்க்குருவியின் அலகுக்கு மேலாக வலைக் கம்பியில் உரசிய சிதைவில் ரத்தம் கசிந்து கொண்டேயிருந்தது.

அதைப் பொருட்படுத்தாமல் அன்று முழுவதும் குருவி பலமுறை வந்து ... தீன்குடுத்து வலைக்கண்களில் குத்திக்குத்தி வெளியே வரத் தவித்து... நாங்கள் திறந்து விட பறந்து போனது.

இவ்வளவு தெரிந்த குருவிக்குப் பொறுமையாக இருக்கத் தெரியவில்லையே ... வேலையில்லாத ஒருவன்வந்து திறந்து விடுவான் என்று புரியவில்லையே என்ற கவலை எங்களுக்கு. மாலைக்குள் அதன் முகத்துக் காயம் ஒருபுண்ணாக மோசமடைந்திருந்தது எனினும் குருவி அதை லட்சியம் செய்யவில்லை.

அதற்குத் தன் தாய்ப்பாசம் பெரிதாக இருக்கலாம். அதனால் தன் முகப் புண்ணை பெரிது படுத்தாமல் வந்து போகலாம். ஆனால்இதைஎங்களால் அலட்சியம் செய்யமுடியவில்லை. மறுநாள் மிருக வைத்தியரிடம் கேட்டு அதன் புண் ஆறக்கூடியதாக மருந்து வேண்டி வந்தோம். அடுத்த முறை குருவி கூட்டுக்குள் வந்ததும் திறந்து விடுவதற்குமுன் பிடித்து அதன் புண்ணில் மருந்தைத் தடவிப் பறக்க விட்டோம்.

''ஓட்டை பெரிசாய் இருக்கிறபடியால் தான் குருவி கூட்டுக்குள்ளை போகுது! அதைக் கொஞ்சம் சிறிசாக்கிவிடலாம் ...தலைமட்டும் உள்ளே நீட்டக் கூடியதாக!''

தனது முன்னைய 'ஐடியா'வுக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தாள் மனைவி. எனினும் இதை உடனடியாக ஏற்றுக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை.

''அதெப்படி...? குஞ்சு அருகில் வந்து தீன் வாங்க வேண்டுமே!''

''நீங்கள் அப்பிடிச் செய்து பாருங்கோவன்! இரண்டு, மூன்று முறைக்குப் பிறகு குஞ்சு தானாகவே பழகிடும்!''

அவள் சொன்னது சரிதான். இத்திட்டம்வெற்றியளித்தது. கூண்டுக்குள்ளே போக முடியாமல் தலையை மட்டும் உள்ளே விட்டு தாயின்அழைப்பைக் கேட்டதும் குஞ்சு முதலில் தயங்கி பிறகு பசி உந்தலில் தட்டுத்தடுமாறி தாயின் அருகில் வந்து தீன் வாங்கியது.

இப்போது எவ்வித கஷ்டமும் இல்லாமல் அந்தச் சிறிய ஓட்டைவழியேதாய் தலையை விட்டு தீன் ஊட்ட, குஞ்சு சாப்பிட்டு வளர்ந்து கொண்டிருந்தது. நாளும் பொழுதும் அதன் சிறகுகள் வளர்ச்சி அடைந்து அழகான தோற்றம் எடுத்தன. ஒருமுறை அதைத் திறந்து விட்டுப் பார்த்தோம். பறக்குமா?'

அதற்குச் சரியாகப் பறக்கத் தெரியவில்லை. சிறகடித்து மெள்ள உயரப் பறந்து கீழே விழும். திரும்பவும் கூட்டில் பிடித்து விடுவோம் —அது நல்ல வளர்ச்சியடையும்வரை

அதை இப்போது குஞ்சு என்று சொல்ல முடியாது. அதனால் இப்போது பறக்க முடியும். 'திறந்து விடலாம்' என தீர்மானித்தபோது மகள் கவலைப்பட்டாள்.

''வேண்டாம்அப்பா! அதை வைச்சுவளர்ப்பம்!'' 'அடைச்சு வைக்கக் கூடாது! பாவம் தானே... திறந்து விடலாம், அது இஞ்ச நிண்டு வளரும் அம்மா'' மகளை ஆதரவாக அணைத்துக் கொண்டேன்.

கதவைத் திறந்து விட்டு அதையே பார்த்துக் கொண்டு நின்றோம்.

கூட்டிலிருந்தபடியே எங்களைத் திரும்பத் திரும்ப பார்த்தது. சிறகைச் சிலிர்த்து சிதறியது. மெள்ளத் தாவி கூட்டின் வாசலில் இருந்தது. சட்டெனப் பறந்து மரக்கிளைக்குப் போனது. அலகினால் ஒவ்வொரு இறகுகளை கோதி விட்டுச் சரிபார்த்தது. அங்கிருந்தபடியே எங்களைப் பார்த்து .. ''கீ! கீ!''

'நன்றி! நன்றி! அப்போது 'கீச்...கீச் 'என்று சத்தம் வந்தது. திரும்பிப்பார்த்தால் இராமன்!

பரபரவென பாதிமரம் இறங்கி வந்து வாலைத் தூக்கித் தூக்கி எங்களைப் பார்த்துக் கத்தியது.

கொண்டைக் குருவிக்குஞ்சை சுதந்திரமாகப் பறக்க விட்டதற்கு தன்னுடைய 'கீச் ..... கீச் ...' சத்தம் மூலம் எங்களுக்கு நன்றி தெரிவிப்பது போல் தோன்றியது.

மீண்டும் உற்சாகமாக சரசரவென்று மரத்தின் உச்சிக்குப் போய் திரும்பிப் பார்த்தது.

இதற்குள் கொண்டைக் குருவிஇரண்டும் எங்கிருந்தோ பறந்துவந்துகுஞ்சின்பக்கத்தில் இருந்தன. குதூகலத்தில் மகிழ்ந்து கத்தியவாறே குஞ்சுடன் சேர்ந்து வேறோர் மரத்திற்குப் பறந்தன ......

ஒருவிதமான திருப்தி உணர்வும் ஆனந்த விம்மலும் என் நெஞ்சை நிறைக்க, பக்கத்தில் நின்றமனைவியையும், மகளையும் திரும்பிப் பார்த்தேன்- என்னடா இது! உத்தியோகத்திற்காக நான் எந்தப் பரதேசம் எல்லாம் போய்வந்தாலும் சிணுங்காத என் மனைவி கண்கள் கலங்கிக் கொண்டு நின்றாள். மகள் வைத்தகண் வாங்காது குருவிகளைப் பார்த்தவாறே கை அசைத்துக் கொண்டிருந்தாள் .. பை!பை!

''கீ! கீ!''

நன்றி
ஆனந்தவிகடன்

## ஏப்ரல் 10 முதல்

O/L
க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

சி-(6337)

ஏப்ரல் 10 முதல்
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
A|L-95

இரசாயனவியல்
திரு. மகாதேவா
பௌதீகவியல்
திரு. வர்ணம்
தாவரவியல்
திரு. ஜிங்கரநேசன்
விலங்கியல்
திரு. கெங்காதரன்
தூய/பிரயோககணிதம்
திரு. கிருஸ்ணா

சி/6339

ஏப்ரல் 10 முதல்
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
A|L-95

இரசாயனவியல்
திரு. மகாதேவா
பௌதீகவியல்
திரு. வர்ணம்
தாவரவியல்
திரு. ஜிங்கரநேசன்
விலங்கியல்
திரு. கெங்காதரன்
தூய/பிரயோககணிதம்
திரு. கிருஸ்ணா

சி/6338

## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு- வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

முகாமையாளர்
ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டிக்குளி.

(சி-6366)

## கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன
## வீரு, காணி, தளபாட
## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி 93/7ஆம் இலக்க ஒரு பரப்புக் காணியும், வீடும் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன தளபாடங்களும்விற்பனைக்குண்டு. வீட்டையும், தளபாடங்களையும் பார்வையிட்டு விலை நிர்ணயிக்கலாம்.

தொடர்பு:-

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(4648)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது

## புத்தாண்டு
## நல்வாழ்த்துக்கள்

குறைந்த விலை! நிறைந்த தரம்!
ஆடவருக்கான ❋ சேட்டிங் ❋ சூட்டிங்
இளநங்கையருக்கான ❋ புதிய ரக சாறிகள்
❋ ஸ்கேட் ❋ பிளவ்ஸ்
சிறுவர்களுக்கான ❋ உள் நாட்டு
❋ வெளிநாட்டு ஆடைகள்

மற்றும் உங்கள் அனைத்து தேவைகளிற்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**எழினி புடைவை வாணிபம்**

மின்சாரநிலைய வீதி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

[4642]

## G. C. E. (A/L) - 1995
## கலை, வர்த்தக வகுப்புக்கள்
## ஆரம்பம் : 10-04-93

பிரிவு I காலை 8.00மணி

யாழ்.நகரில் இன்று முன்னணி ஆசிரியர் குழுவைக்
கொண்ட தனித்துவம் வாய்ந்த
ஒரே ஒரு நிறுவனம்

**கலை வர்த்தகக் கல்லூரி**
**C. C. A.**

வெலிங்டன் சந்திக்கருகாமை,
யாழ்ப்பாணம்.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. இரட்ணம் |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| புவியியல் | — | திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | — | திரு. பஞ்சு |
| கிறிஸ்தவ நாகரிகம் | — | திரு. செபஸ்ரீன் |

(சி/6365)

\- நிர்வாகி

## Personal Classes

Basic English.
General English
Advanced English

**ஆரம்பம்**
**10-04-93**

காலை
9.00 மணிக்கு

க. சபாநாயகம்
4, பிள்ளையார் ஒழுங்கை,
திருநெல்வேலி.

(4650)

## யாழ்.மாவட்ட ச.ச.
## நிலையங்களின்
## கவனத்திற்கு

யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள் சில பல்வேறு தேவைகளுக்காக நிதிகள் சேகரித்தல் சம்பந்தமாக பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதால் எதிர்வரும் காலங்களில் எந்த ஒரு சனசமூக நிலையமும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தின் முன் அனுமதியின்றிப் பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். அனுமதியுடன் நிதி சேகரிக்கும் பட்சத்தில் நிதி சேகரித்து முடிந்ததும் அவற்றின் விபரத்தினை உள்ளூராட்சி மன்றங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

[சுந்தரம் டிவகலாலா]
பிராந்திய உள்ளூராட்சி
ஆணையாளர்,
(சி/6369) யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முழுநேர உபவிடுதித் தலைவர் (ஒப்பந்த அடிப்படையிலான) பதவி தொடர்பாகச் செய்தித் தாள்களில் வெளிவந்தவிளம்பரத்திற்கு மேலதிகமாக.


இவ் விளம்பரத்திற்கான முடிவுத் திகதி தற்போது 1993 ஏப்ரல் 20வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(அ) வெற்றிபெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும் பிணைவைப்பாக ரூபா 5000/- செலுத்துதல் வேண்டும். முன்னர் விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டவாறு 10,000/- ரூபா அல்ல என்பதனையும்,

(ஆ) முந்திய விளம்பரத்திற்கு ஏற்ப விண்ணப்பித்தோர் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை என்பதனையும் தயவு செய்து கவனிக்கவும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
1993.04.07 (சி-6379)

# மாகாண சபைத்தேர்தல்; எதிர்க் கட்சிகளிடையே முதன்மைக்கான போட்டி



மே 17

சிறிலங்காவில் இரண்டாவது மாகாணசபை தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. ஏழு மாகாண சபைகளுக்குமென 17 மாவட்டங்களில் வேட்பு மனுத்தாக்கல் நேற்றுடன் முடிவடைந்துள்ளது. தென்னிலங்கை அரசியலும் சூடேறத் தொடங்கியுள்ளது.

இத்தேர்தலில் நான்கு முனைப் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கியதேசியக்கட்சி தலைமையிலான கூட்டணி; சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி; லலித் காமினி தலைமையிலான ஜனநாயகஐக்கியதேசியமுன்னணி; நவசமசமாசக் கட்சியின் தலைமையிலான கூட்டு முன்னணி என்பனவே இவ்நான்கு அணிகளாகும். இதில் முதல் மூன்று அணிகளுக்கும் இடையில் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படும் வேளையில், தேர்தலில் இக்கட்சிகளுக்குக் கிடைக்கப் பெறும் வெற்றி தோல்வியில் பலரது அரசியல் வாழ்வையும் இவ் அரசியற் கட்சியின் அரசியல்எதிர்காலத்தையும் நிர்ணயிக்க கூடியவையாக அமைந்து விடக்கூடியவையும் ஆகும்.

## 1

இத்தேர்தலைப் பொறுத்து ஆளும் ஐக்கிய தேசிய கட்சி பலமான நிலையில் இருப்பதாகவே அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றார்கள். இதற்கு எதிர்க்கட்சிகளிடையேகாணப்படும் ஒற்றுமையின்மை, உட்கட்சிப் பூசல் என்பவையே மூக்கியமானகாரணங்கள்எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. ஆனால் இவற்றை விட தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி ஏனைய கட்சிகளைவிட பல வாய்ப்பு வசதிகளை அனுபவிப்பதற்கு வாய்ப்புக்களும் உள்ளன.

''பிரேம வாகினி'' என்றே தற்பொழுது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ரூபவாகினி தொலைக்காட்சி சேவையைஎதிர்க்கட்சியினரும் அரசாங்கத்திற்கு எதிரான பத்திரிகைகளும் கிண்டல்செய்கின்றன. இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு எனவும் கூறி விடமுடியாது. ரூபவாகினி நாளாந்த செய்தி அறிக்கையில்ஜனாதிபதிபிரேமதாசாவின் செய்திகளுக்கென குறிப்பிட்டளவில் நேரம்ஒதுக்கப்பட்டுள்ளதை எவரும் மறுத்து விட முடியாது என்றே எண்ண வைக்கின்றது.

ரூபவாகினியில் ஜனாதிபதி தொடர்புபடும் செய்திகள்தினசரி குறைந்தது ஒரு அறிக்கையில் மூன்று தடவைகள் இடம் பெறுகின்றன ஜனாதிபதிதொடர்புபடும் இச்செய்திகளில் ஜனாதிபதி ஓர் ஆடை தொழிற்சாலை திறந்து வைத்தல்;ஓர் ஆடைதொழிற்சாலை பார்வையிடுதல்; ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் திறந்து வைத்தல்; போரில் காலை இழந்த ஓர் இராணுவ சிப்பாய்க்கு முச்சக்கர மோட்டார் சைக்கிளும 5000ரூபாவிற்கான காசோலையும்வழங்குதல் என்பனவழமையானநாளாந்தநடவடிக்கையாக மாறியுள்ளன.

இவை இல்லாவிட்டால்ரூபவாகினியில், செய்தி அறிக்கையே இல்லைஎன்ற நிலைஉருவாகியுள்ளது. அத்தோடு ஜனாதிபதியின்பௌத்தஆலயதரிசனமும், பிக்குகளிடம் ஆசிபெறுதலும் ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி நடைபெறும் போதி பூசைகள் பற்றிய செய்திகளும் மேலதிகமாக அடிக்கடி இடம் பெறும் செய்திகளாகும்.

தொலைக்காட்சியின் செயற்பாடு இவ்வாறிருக்க அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் எதிர்க்கட்சிகளுக்குஎதிரான பிரசாரத்தில் முக்கிய பங்கேற்றுச்செயற்படுகின்றன செய்திகளும், கட்டுரைகளும் எதிர்க்கட்சிகள் மீது சேற்றை வாரிஇறைப்பவையாகவே உள்ளன. அண்மைக் காலங்களில், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு இடையில் ஏற்பட்டுள்ளகருத்து மோதல்களை தலைப்புச் செய்திகளாக ஒரேவிடயத்தை பல தடவை பிரசுரிப்பதே அப்பத்திரிகைகளின் வாடிக்கையாக மாறியுள்ளது.

இவ்வாறாக ஒரு புறம் அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் எதிர்க்கட்சியினர் மீது வசைபாட மறுவழமாக அரச எதிர்ப்பு பத்திரிகைகள் மீது அரசாங்கம் கட்டுப்பாடுகளை விதித்தும் மிரட்டியும் வருகின்றது. பத்திரிகைகள் 'சீல்' வைக்கப்பட்டன. பத்திரிகையாளர் தாக்கப்பட்டும் உள்ளனர். ஒரு வகையில் எதிரணியினர். மிரட்டலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றே கூறலாம். இக் கருத்தை வலியுறுத்துவதாகவே நேற்றுமுன்தினம் ஜ. ஐ. தே. முன்னணியின் உறுப்பினர்கள் கொழும்பில் தாக்கப்பட்டதுமான சம்பவங்களாக இருந்தன.

ஐ. தே.கட்சி அரச வளங்கள் யாவற்றையும் தேர்தலில்தமக்குப் பயன்படுத்தும் என்பது கூறத் தேவையற்றதாகும். இது ஆட்சியில் உள்ள கட்சிகள் மேற்கொள்ளும் ஒரு வழமையான நடவடிக்கை என்பதோடு மட்டுமல்லாமல், கடந்த 15வருடங்களுக்கு மேலாக ஆட்சியில் இருந்து விட்ட ஐ. தே. கட்சி இதில் கைதேர்ந்த கட்சியாகவும் மாறிவிட்டது.

இந் நிலையில் அரசியலில் ஐக்கியதேசிய கட்சியின்வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கின்றது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கணிப்பீடாகவே உள்ளது. இருப்பினும் மேல் மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் ஜ. ஐ. தே.முன்னணியும் தென்மாகாணத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியும் ஐ. தே. கட்சிக்கு பலத்த சவாலாக அமையக்கூடும். இம்மாகாணங்களில் ஜ ஐ.தே.முன்னணியிலுள்ள சிலரும் சுதந்திர கட்சியிலுள்ள சிலரும் தனிப்பட்ட செல்வாக்கைப்பெற்றுள்ளமை இதற்கான காரணமாகும்.

## 2

எதிர்க் கட்சிகளைப் பொறுத்து இம்மாகாண சபைத் தேர்தலானது அரசாங்கக் கட்சிக்கு எதிரான தேர்தல் மட்டுமல்ல. எதிர்க் கட்சிகளில் யார் பலம் பொருந்திய கட்சி என்பதை நிர்ணயிககும் தேர்தலும் ஆகும்.

பொதுவாக இதுவரை காலமும் சிறிலங்காவில் இடம் பெற்ற தேர்தல்களில் மும்முனைப் போட்டிகள் இடம் பெற்றன. இவற்றை. முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஐ.தே. கட்சி அணி எனவும், ஓரளவு இடதுசாரி தத்துவங்களை ஏற்றுக் கொண்ட சுதந்திரக் கட்சியும், மிதவாத இடதுசாரிகளையும் கொண்ட கூட்டணி எனவும் தீவிர இடதுசாரிகளின் அணி எனவும் வகைப்படுத்தலாம்.

ஆனால் இம்முறை ஐ. தே. கட்சியில் இருந்து பிரிந்து வந்த லலித் - காமினி குழுவினரின் தேர்தல் பிரவேசம் நான்கு அணிகளை உருவாக்கியுள்ளது. இதனால், சிறிலங்கா அரசியலில் ஆளும் கட்சிக்கு அடுத்த ஸ்தானம் யாருக்கு என்ற புதிய சர்ச்சை ஒன்று உருவாகியுள்ளது கடந்த காலங்களில் மும்முனைப் போட்டிகள் இடம்பெற்றாலும், ஆளும்கட்சி, எதிர்க் கட்சி என்ற வகையில் ஐ.தே. கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எதுவித கேள்விக்கும் உள்ளாகவில்லை ( 1977 ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாக வந்தமையை ஒரு வரலாற்றுப் பிறழ்வு என்றே குறிப்பிடலாம் ) ஆனால் இம்முறை தேர்தலில் அது ஒரு முக்கியமான கேள்வியாகும். அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான போட்டியாளர் யார்? சுதந்திரக் கட்சியா அன்றி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியா? இதனை இத்தேர்தலே நிர்ணயிக்கப் போகின்றது.

இதற்கு ஏற்றாற்போல் எதிர்க்கட்சிகளும் தமது அரசியல் வியூகத்தை அமைத்துக் கொண்டுள்ளன. சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க அமைத்த பொதுசன ஐக்கிய முன்னணி குறித்து சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா அவ்வளவாகத் திருப்தி கொள்ளவில்லை. அமெரிக்காவில் அவர் இருக்கும் போது இம் முன்னணி அமைக்கப்பட்டாலும்,நாடு திரும்பியதும் அதனைக்கலைத்துவிடுமாறு அவர் குரல் எழுப்பவில்லை. இதற்கு முக்கிய காரணம் சுதந்திரக் கட்சி மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. கட்சியை வெல்ல முடியாவிட்டாலும் ஜ ஐ.தே. முன்னணிக்கு எதிராக அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே ஆகும்.

இது குறித்து அநுரா பண்டாரநாயக்கா வெளிப்படையாகவே பேசியுள்ளார். ''பொது ஜன ஐக்கிய முன்னணியிலுள்ள தலைவர்களுடனான எமது உறவு சாதகமாகவே உள்ளது. ஆனால் நான் அடிப்படையில் சுதந்திரக் கட்சியைப் பற்றி மட்டுமே கவனம் செலுத்துகிறேன். அத்துடன் நான் யாருக்கும் கடமைப்பட்டவனல்ல. எம்முடைய வேட்பாளர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதே என்னுடைய கவனமாகவுள்ளது ..''

மேலும்''ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எம்முடைய வாக்குகளில் மிகவும் குறைந்தளவானதையே பெற்றுக் கொள்வதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்'' ......''நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்து வரவுள்ள பாராளுமன்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு பரீட்சையாகவே இருக்கும். எனவே சுதந்திரக்கட்சிக்கும் அதன் முன்னணிக்கும் இத்தேர்தல் முக்கியமானவையாகவே இருக்கும்''என குறிப்பிட்டுள்ளார். இது சுதந்திரக்கட்சியின் இன்றைய நிலைப்பாட்டை வெளிக்காட்டும் தெளிவான கூற்றுக்களாகும்.

அதாவது இத் தேர்தல் சுதந்திரக்கட்சியின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தேர்தல் என கண்டுகொண்டுள்ள அநுரா பண்டாரநாயக்கா தனது அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குரியதாக்க விரும்பாது தமது உட்கட்சிப்பூசலை ஓரளவு ஒதுக்கிவைத்துள்ளார். இதனால் நாட்டில் இல்லாத நிலையிலும், தாயார் தயார் செய்த பொதுசன ஐக்கிய முன்னணியைக் கலைக்காது பொறுமை காத்து வருகின்றார்.

## 3

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தான்சந்திக்கும் முதலாவது தேர்தல் இதுவாகும். இத்தேர்தல் சிறிலங்காவில் இக் கட்சியின் அரசியல் ஸ்தானத்தை நிர்ணயிக்கப் போவதாகும். இதனால் இத் தேர்தலை ஜ. ஐ. தே. முன்னணி முழுப்பலத்துடன் எதிர்கொள்ள தீர்மானித்திருப்பதாக அதன் நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

பிரேமதாசாவின் ஆட்சியைக் கவிழ்ப்பது என்பதையே தனது முழுமையான நோக்கமாகக் கொண்டுள்ள போதும், ஜ. ஐ. தே. முன்னணி அதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் தற்பொழுது அணி சேர்ந்து கொள்வதற்கு தயாராக இருக்கவில்லை சுதந்திரக் கட்சியுடன்கூட்டுச்சேர்ந்து கொள்ளும் பட்சத்தில் தமது இடம் திட்டவட்டமாக மூன்றாம் இடமானது எனக் கணிக்கப்படும் என்பதை சரியாகக் கணிப்பிட்டுள்ள லலித்-காமினி குழுவினர், இத் தேர்தலில் தமது அரசியல் எதிர்காலத்தைப் பரிசோதிக்கத் துணிந்து விட்டனர் என்றே கூறலாம்.

இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் காணப்படும் உட்கட்சிப் பூசலும் அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்தசந்தர்ப்பத்தை ஜ.ஐ. தே. முன்னணி கைவிடுமானால் இதே போன்ற சந்தர்ப்பம் ஒன்று அவர்களுக்குக் கிடைக்காமலே போகலாம். இதனை சரியாக மதிப்பீடு செய்துள்ளஜ ஐ.தே. முன்னணியினர் அரசை தோற்கடிக்க முடியாவிட்டாலும் சுதந்திரக் கட்சியை தோற்கடிப்பதன் மூலம் ஐ.தே.கட்சியின் போட்டியாளர்கள் எனத் தம்மை உயர்த்திக் கொள்ள முற்பட்டுள்ளனர்.

இதற்கென ஜ. ஐ.தே. முன்னணி தனது முழுப் பலத்தையும், வளத்தையும் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. இதன் ஓர் அம்சமே தேசிய அரசியலில் முன்னணி நட்சத்திரங்களாக பிரகாசித்த ஜ ஐ.தே. முன்னணித் தலைவர்கள் மாகாண அரசியலுக்கு இறங்கிசென்றுள்ளனர். லலித் அத்துலத் முதலி மேல் மாகாண சபையிலும், காமினி திசநாயக்கா மத்திய மாகாணத்திலும், ஜி. எம். பிரேமச்சந்திரா வடமேல் மாகாணத்திலும் தமது கட்சியின் சார்பில் போட்டியிட முன்வந்துள்ளனர். அத்தோடு காமினி திசநாயக்காவின் மனைவியும் மத்திய மாகாணத்தில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார் இவை இத்தேர்தலுக்கு ஜ. ஐ. தே. முன்னணிகொடுக்கும்முக்கியத்துவத்தை வெளிக்காட்டும் முக்கிய அம்சங்களாகும்.

இவற்றை நோக்கும் போது இத் தேர்தலை தமது அரசியல் எதிர்காலத்திற்கான அடித்தளமாக சுதந்திரக் கட்சியும் ஜ. ஐ. தே. விடுதலை முன்னணியும் எடுத்துக் கொண்டுள்ளதை புரிந்துகொள்ள முடியும் இதில் கிடைக்கும் வெற்றி தோல்விகள் அவர்களின் அரசியல் எதிர்காலத்தை எடுத்துக் காட்டும் பாராளுமன்றத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் என்பனவற்றில் ஐ. தே. கட்சிக்கெதிரான பிரதான போட்டியாளர்கள் யார் என்பதையும் தீர்மானித்து வரும் இந்நிலையில் தமது பரீட்சைக் களமாக இத் தேர்தலை எதிர்கட்சிகள் ஆக்கிக் கொண்டுள்ளன.

சுருங்கக் கூறின், இத் தேர்தல் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்குமிடையில் மாகாணசபை அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கான தேர்தல் என்பதைவிட எதிர்க்கட்சிகள் தமது அரசியல் முதன்மையை நிலை நாட்ட முற்படும் தேர்தல் எனக் கூறினும் மிகையாகாது.

**- ஜெயராஜ்**

## யாழ்-வன்னி

இடங்களிலும் ஒரு ரூபா கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இப்படிவத்தை மொத்தமாகப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் பத்து வீத கழிவுடன் முத்திரைச்சந்தி வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான அனுமதி வழங்கும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்குமிடையே தற்போது போக்குவரத்துச் சீரின்மை காரணமாக ஏற்பட்டுள்ள தகவற்பரிமாற்றத் தடங்கல்களைக் கருத்திற்கொண்டு யாழ். நகரிற்கும் கிளிநொச்சிக்கும் இடையேயான தொடர்புச்சேவை ஒன்றைப் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளோம். எமது செயற்பாட்டின் ஆரம்ப முயற்சியாகக் கீழ்க்காணும் நடைமுறைகளுக்கேற்ப ஆரம்பிக்கப்படும். குறிப்பிட்ட நடைமுறை பற்றியும், செயற்பாடுகள் பற்றியும் எல்லாத் தமிழீழ மக்களிடமிருந்தும் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

இச்சேவைக்கான செயலகங்கள் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடத்தில்), கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில்உள்ள கட்டடத்திலும், மேலும் தகவல் கைமேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் இயங்கும்.

செயலகங்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 வரையும், மாலை 1-30 தொடக்கம் 5-00 மணி வரை இயங்கும். வாரத்தில் ஏழு நாட்களும் மேற்குறிப்பிட்ட நேர ஒழுங்குப்படி கருமபீடங்கள் இயங்கும்.

தொடர்புத் தகவல்களைக் கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களைச் சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கலாம்.

**சலுகை அடிப்படையிலான தகவல்கள்:-**

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும் மரண அறிவித்தல் செய்திகளும் சலுகை அடிப்படையிலான தகவல்களாகக் கொள்ளப்படும். வைத்திய அதிகாரியின் குறிப்பிட்ட பிரதேச சிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராம சேவகரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும் செய்திகள் மாத்திரமே மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படையிலான தகவல்களாக ஏற்றுக் கொள்ளப்படும்.

15ற்கு மேற்படாத சொற்களுக்கு ரூபா 15ம், மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2 ம் அறவிடப்படும்.

குறிப்பு:

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும், மரண அறிவித்தற் செய்திகளையே சாதாரண தகவல்களாக ஏற்றுக் கொள்வதாக இருப்பினும் மேற் குறிப்பிட்டுள்ளோரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் பெற்றிருக்க வேண்டும்.

**வியாபாரத் தகவல்:**

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்கள் இக்குறிப்பிட்ட வகையில் அடங்கும்.

முதற் பத்து சொற்களுக்கும் ரூபா 100ம், மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15ம் கட்டணமாக அறவிடப்படும்.

**வழமையான தகவல்:**

மேற்குறிப்பிட்ட சலுகை அடிப்படைத் தகவலிலும் வியாபாரத் தகவலிலும் உள்ளடங்காத மற்றைய எல்லாத் தகவல்களும் வழமையான தகவல்களாகக் கொள்ளப்படும்.

முதற் பத்து வரையிலான சொற்களுக்கு ரூபா 50ம் மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5ம் கட்டணமாக அறவிடப்படும்.

**விநியோக வகைகள்:**

**சாதாரண விநியோகம்:**

தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணிநேர இடைவெளிக்குள் அவ்வப்பகுதித் தபால் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் கையளிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் சாதாரண விநியோகத்திற்கே உரியனவாகும்.

**விரைவு விநியோகம்:**

இது தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணிநேர இடைவெளியிற் தபால் ஊழியரின் ஒத்துழைப்புடன் ''நேரடியாக'' விநியோகிக்கப்படும். விரைவு விநியோகத்திற்காகச் சாதாரண கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

குறிப்பு:

1. வன்னிப்பகுதி விநியோகங்கள் கண்டி வீதியை மையமாகவைத்தே விநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்திலிருந்து 3 மைல்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதிகளிற்கும் குஞ்சுப்பரந்தன் இறங்குதுறைப் பகுதிக்கும் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும்.

2. தெளிவில்லாதமுகவரிகள், தகவல்விபரங்கள் என்பனவற்றால் ஏற்படும் தாமதங்கள், விளக்கமின்மை என்பனவற்றிற்காக விநியோக சேவையினர் பொறுப்பேற்க முடியாது என்பதுடன் குறிப்பிட்ட காரணங்களிற்காகத் தகவல் கையேற்கப்படுவதிலிருந்தும் மறுக்கப்படலாம்.

3. வன்னிப்பகுதி முகவரி இல்லாதவர்களின் வசதிக்காக (பயணிகள்) சோதனை நிலைய கருமபீடத்தையும் கிளிநொச்சி அலுவலகத்தையும் முகவரியாக அமைத்துத் தகவலை அனுப்பலாம். உரியவர், தன்னை உரிய ஆவணத்தினூடாக அடையாளம் காட்டிக் கோரும்பட்சத்தில் தகவல் வழங்கப்படும்.

4. கட்டணங்கள் யாவும் பணமாகவே செலுத்தப்படவேண்டும்.

5. விரைவு விநியோகத்திற்காகத் தகவல்களை ஒப்படைப்பவர்கள் தாம் விரும்பினால் பதில் தகவல்களுக்கான கட்டணத்தையும் செலுத்தினால் தகவலை உரியவரிடம் ஒப்படைக்கும் போதே பதில் தகவல் பெற்று அனுப்பப்படும்.

6. தகவல் விநியோகப்படிவத்தினை ரூபா 1 கொடுத்துப் பரவலாக எல்லா இடத்திலும் பெற்றுக்கொள்ளலாம், செயலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

7. எல்லாத் தகவல்களும் தமிழ் மொழியில்மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.

8. தகவலைக் கொடுப்போர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை அல்லது வடபகுதிக்கு வெளியே செல்லும் அனுமதிஅட்டையையோ காட்டித் தன் அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுமக்களின் நலனை நோக்கமாகக் கொண்டு பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும் இச்சேவை ஆரம்பநடைமுறை வெற்றியை வைத்தே தொடரும் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அறியத் தருகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 08-04-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 9003

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

41-9876, 24-4292, 22-3379, 24-9967, 24 9938, 40-9188, 41-9989, 24-3844.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-1706, 26-4485, 24-0336, 26-5244, 26-3937, 41-9659, 26-5560, 40-1516, 42-2364, 27 7717, 27-4162, 28-1992, 26-3530, 26-4648, 26-9658, 27-2088, 26-5814, 24-4560, 26-3998, 40-2394, 40-2573, 41-9759, 24-5734, 27-3910, 26-0403.

ஸ்ரீதர் திரையரங்கில்

100 RIFLES

(100 துப்பாக்கிகள)

தமிழ் விளக்கம்

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

(சி-6376)

## வீரச்சாவு

வீரவேங்கை றொபி/கதிராஜன் (சண்முகம் தோத்திரலிங்கம் சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை) எனும் போராளியே வீரச்சாவு அடைந்தவராவார்.

ஆறுமுகம் தங்கவடிவேல் (கோரகல்லி மடு) காதிர்காமன் கோபாலன்(கோரகலிமடு) ஆகியோரே இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட பொதுமக்கள் ஆவர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஆறு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## பொன்னாலையில்

பலம் அருள்ராசா [வயது 10] எனும் சிறுவன் தமது உறவினர்களுடன் பொன்னாலை மங்களேஸ்வரா வீதியிலுள்ள பனந்தோப்பினுள் விறகு சேகரித்துக் கொண்டு நின்றபொழுது அங்கு வந்து வீழ்ந்த ஷெல் வெடித்துச் சிதறியதால் கீழ்ப்புற முதுகில் காயப்பட்ட நிலையில் அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இச் சிறுவன் காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து தொல்புரம் மத்தியில் வசித்து வருபவர் எனத் தெரியவருகிறது. [41]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
5-4-1968

மறைவு
11-3-1993



திருமதி
**அமுதலட்சுமி சந்திரதாஸ்**
(தங்கக்கிளி)
திதி: 10-04-1993

பார்க்கும் பொருளிலெல்லாம் - உந்தன்
பாசமுகம் தோன்றுதம்மா
பாரினிலே வேறெதையும் எம்விழிகள்
பார்க்க மறுக்குதம்மா

எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி பெற மனமுருகி இறைவனை என்றும் வணங்குகின்றோம்.

10-04-1993 சனிக்கிழமை (நாளை) காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிருத்தியங்களில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திடீரென ஏற்பட்ட மரண சம்பவத்தினை உறவினர் சிலருக்கு உடன் தெரிவிக்க முடியாமல் போனதையிட்டு மனம் வருந்துகிறோம்.

இன்பருட்டி. கணவன், பிள்ளைகள்.
(சி-6371)

## அருணின் ஐந்தாமாண்டு நினைவாக...



**கப்டன் அருண்**
(ஏரம்பு பாலச்சந்திரன்)
புங்குடுதீவு-1

பிறப்பு 18-10-1960 — வீரச்சாவு 09-04-1988

எங்கள் குருதிக் கொடியின் பூவே!
எழுந்தே நிமிர்ந்து ஏறிய புலியே!
கங்குல் கிழிக்கத் துடித்த கதிரே!
களத்தில் திரிந்த காவியத் திருவே!
திங்கள் வதன அழகே! அருணே!
தீயென மூண்ட செந்தமிழ்க் காற்றே!
சொந்தங்கள் இங்கே துடிப்பதைப் பாராய்
தோன்றியெம் மடியில் துள்ளிட வாராய்
வேங்கையென் றெங்கள் வீட்டினில் பிறந்தாய்
வீரனாய் கருவி ஏந்தியே திரிந்தாய்
காங்கை கொண்டிங்கே கனலென மூண்டாய்
களத்தினில் வீழ்ந்துமே காவியம் ஆனாய்
வேங்கைகள் முகங்களில் உன்முகம் காண்போம்
விடிகின்ற வேளையில் உன்குரல் கேட்போம்
ஏங்கியே இனிமேல் அழுதிட மாட்டோம்
எத்தனை துயரிலும் ஓய்ந்திட மாட்டோம்.

உன் நினைவுடன்
அப்பா, அம்மா, அண்ணன்,
அக்காமார், அத்தான்மார், அண்ணி,
மருமக்கள், உறவினர், நண்பர்கள்.
(சி-6382)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.